# இலக்கிய நயம்

## ஆசிரியர் வழிகாட்டி

(2015 ஆம் ஆண்டிலிருந்து நடைமுறைப்படுத்தப்படவுள்ளது)

# தரம் 10




தமிழ் மொழித்துறை
தேசிய கல்வி நிறுவகம்
மஹரகம
ஸ்ரீலங்கா.
இணையத்தளம்: www.nie.lk
மின்னஞ்சல்: info@nie.lk

# இலக்கிய நயம்

# ஆசிரியர் வழிகாட்டி

# தரம் 10

(2015 ஆம் ஆண்டிலிருந்து நடைமுறைப்படுத்தப்படவுள்ளது)

தமிழ்மொழித் துறை
தேசிய கல்வி நிறுவகம்
ஸ்ரீலங்கா
இணையத்தளம் : **www.nie.lk**
மின்னஞ்சல் : **info@nie.lk**

# இலக்கிய நயம்

## ஆசிரியர் வழிகாட்டி

## தரம் 10

(2015 ஆம் ஆண்டிலிருந்து நடைமுறைப்படுத்தப்படவுள்ளது)

தமிழ்மொழித் துறை
தேசிய கல்வி நிறுவகம்
ஸ்ரீலங்கா
இணையத்தளம் : www.nie.lk
மின்னஞ்சல் : info@nie.lk

இலக்கிய நயம்
ஆசிரியர் வழிகாட்டி
தரம் - 10

© தேசிய கல்வி நிறுவகம், மஹரகம.

ISBN

முதலாம் பதிப்பு : 2015
தேசிய கல்வி நிறுவகம்

தமிழ்மொழித் துறை,
மொழிகள், மானுடவியல், சமூக விஞ்ஞான பீடம்
தேசிய கல்வி நிறுவகம்
ஸ்ரீலங்கா.

இணையத்தளம் **: www.nie.lk**
மின்னஞ்சல் **: info@nie.lk**

பதிப்பு
தேசிய கல்வி நிறுவகம்

## பணிப்பாளர் நாயகம் அவர்களின் செய்தி

இலங்கையின் இடைநிலைக் கல்வியில் புதிய தேர்ச்சிமையப் பாடத்திட்டத்தின் முதற் கட்டம் 2007 ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்டது. எட்டு ஆண்டுகளுக்கொருமுறை மேற்கொள்ளப்படும் கலைத்திட்ட மறுசீரமைப்பின் மூலம் இது அறிமுகப்படுத்தப்பட்டது. தேசிய மட்டத் தேர்ச்சிகளை அபிவிருத்தி செய்யும் நோக்கின் அடிப்படையில் தேசிய கல்வி ஆணைக்குழுவின் விதப்புரைகளுக்கமைய, அப்போது நடைமுறையிலிருந்த உள்ளடக்கம் சார்ந்த கல்வி முறைமை இதன் மூலம் மாற்றியமைக்கப்பட்டது.

தேர்ச்சிமையக் கலைத்திட்டத்தின் இரண்டாம் கட்ட மறுசீரமைப்பானது 2015ஆம் ஆண்டிலிருந்து தரம் 6, 10 ஆகிய வகுப்புக்களுக்கு அமுல்படுத்தப்படவுள்ளது. இந் நோக்கத்தை அடையும் பொருட்டுத் தேசிய கல்வி நிறுவகம் ஆய்வை அடிப்படையாகக் கொண்ட பேறுகளையும் ஆர்வலர்களுடைய பல்வேறு ஆலோசனைகளையும் பலதரப்பட்டவர்களிடமிருந்தும் பெற்றுக்கொண்டது. அவற்றின் அடிப்படையில் நியாயப்படுத்தப்பட்டதொரு செயன்முறையை அறிமுகப்படுத்தியதுடன் அதற்கமைவான பாடத்திட்டங்களையும் மேற்படி தரங்களுக்காக விருத்தி செய்துள்ளது.

இந்த நியாயப்படுத்தற் செயன்முறையிற் கலைத்திட்ட மறுசீரமைப்பின் போது நிலைக்குத்தான ஒருங்கிணைப்பு முறை பயன்படுத்தப்பட்டு, கீழிருந்து மேல்நோக்கிய அணுகுமுறையில் அனைத்துப் பாடங்களுக்குமான தேர்ச்சி மட்டங்கள் முறைமையாக விருத்தி செய்யப்பட்டுள்ளன. மேலும், அடிப்படை விடயங்களிலிருந்து உயர் மட்டத்தை நோக்கிச் செல்லும் வகையில் அவை ஒழுங்குபடுத்தப்பட்டும் உள்ளன. பாட உள்ளடக்கத்திற் காணப்படும் கூறியது கூறல் மற்றும் பாட உள்ளடக்கச் சுமை என்பவற்றை இழிநிலைக்கு இட்டுச் செல்லவும் மாணவர் நேயமானதும் நடைமுறைக்கேற்றதுமான கலைத்திட்டமொன்றை உருவாக்கும் நோக்கிலும் கிடையான ஒருங்கிணைப்பானது பயன்படுத்தப்பட்டுள்ளது.

ஆசிரியர்களுக்குத் தேவையான வழிகாட்டல்களை வழங்கவும் பாடத்தைத் திட்டமிடவும் கற்பிக்கவும் செயற்பாடுகளை முன்னெடுக்கவும் அளவீடு மற்றும் மதிப்பீடுகளை மேற்கொள்ளவும் உதவுமுகமாக ஆசிரியர் வழிகாட்டியிற் புதிய வடிவமைப்பு அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இவ் வழிகாட்டல்கள் ஆசிரியர்கள் வகுப்பறையில் மென்மேலும் உற்பத்தித் திறனுள்ளதும் விளைதிறன் மிக்கதுமான வகையிற் துலங்குவதற்கு உதவும்.

புதிய ஆசிரியர் வழிகாட்டிகள் மாணவர்களது தேர்ச்சிகளை விருத்தி செய்யும் வகையிற் தர உள்ளீடுகளையும் மேலதிக செயற்பாடுகளையும் தெரிவு செய்வதில் ஆசிரியர்களுக்குச் சுதந்திரத்தை வழங்கியுள்ளது. இப்புதிய ஆசிரியர் வழிகாட்டிகள் பாட உள்ளடக்கச் சுமையை விடுத்து, விதந்துரைக்கப்பட்ட பாடநூல்களின் மூலம் பாட உள்ளடக்கத்தைப் பூரணப் படுத்தியுள்ளது. ஆகவே, ஆசிரியர்கள் புதிய ஆசிரியர் வழிகாட்டிகளைப் பயன்படுத்தும் அதேவேளை கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தினாற் தயாரிக்கப்பட்ட பாடநூல்களையும் பொருத்தமான வகையிற் பயன்படுத்துதல் வேண்டும்.

ஆசிரியர் மையக் கல்வி முறைமையிலிருந்து மாணவர் மையக் கல்வி முறைமைக்குத் தளமாற்றம் செய்வதும் வேலையுலகிற்கு ஏற்ற வகையிற் பொருத்தமான மனித வளங்களை விருத்தி செய்வதும் தேவையான தேர்ச்சிகளையும் திறன்களையும் பாடசாலையிலிருந்து வெளியேறும் மாணவர்கள் பெற்றுக்கொள்வதற்குத் தேவையான செயற்பாடு சார்ந்த கல்வி முறைமையை விருத்தி செய்வதும் மேற்படி நியாயப்படுத்தப்பட்ட பாடத்திட்டம் மற்றும் ஆசிரியர் வழிகாட்டியின் புதிய வடிவமைப்பு என்பவற்றின் அடிப்படை நோக்கங்களாகும்.

புதிய ஆசிரியர் வழிகாட்டியை உருவாக்குவதிற் பங்களிப்புச் செய்த தேசிய கல்வி நிறுவகத்தின் கல்விசார் அலுவல்கள் சபை மற்றும் பேரவை உறுப்பினர்களுக்கும் அனைத்து வளவாளர் களுக்கும் எனது நன்றிகள் உரித்தாகின்றன.

**பணிப்பாளர் நாயகம்**
**தேசிய கல்வி நிறுவகம்**

## பிரதிப் பணிப்பாளர் நாயகம் அவர்களின் செய்தி

கற்றல் என்பது பரந்து விரிந்து செல்வதொன்றாகும். அது வாழ்க்கையை மேம்படுத்தவும் எளிமைப்படுத்தவும் வல்லது. மனிதன் கற்கும் ஆற்றலில் உச்ச நிலையில் உள்ளான். மனித, சமூக அபிவிருத்தியை மையமாகக் கொண்ட ஒரு நாடும் அதன் சமூகமும் அறிவாற்றலினால் இனங்கண்ட, நியமமற்றவற்றைக் களைவதற்கும். நல்லவற்றைப் பண்படுத்திப் புத்துலகைப் படைப்பதற்கான கருவியாய் அமைவது கல்வியாகும்.

கற்றலுக்காகப் பெறுமதிமிக்கவை எவையோ அவையும், கற்றல் முறையியல்களும் வசதிகளும் கல்வியைச் சூழ உருவாதல் வேண்டும். கலைத்திட்டம், பாடத்திட்டம், வழிகாட்டிகள், வசதி செய்வோர் போன்றவையெல்லாம் இவ்வகையிலேயே கல்வித்துறையிற் சேர்ந்து கொள்கின்றன.

இலங்கை, நவீன செல்நெறிகளையும் பண்டைய அருஞ்செல்வங்களையும் கலக்கச் செய்து தமது கல்விக்கோலத்தை உருவாக்கிக்கொண்டுள்ளது. சமகாலத் தேவைகளுக்கமைய மறுசீரமைப்புகளினூடாக எட்டு ஆண்டுகளுக்கொருதடவை இற்றைப்படுத்தப்படும் கலைத்திட்டத்துக்குரிய ஒரு கற்றல் வளமாக இவ்வாசிரியர் வழிகாட்டிகள் தயாரிக்கப்படுகின்றன.

பாடக் குறிக்கோள்களின் ஒத்ததன்மையைத் தேசிய மட்டத்தில் பேணுவது அவசியமாகும். எனினும், ஆசிரியர் வழிகாட்டியிற் தரப்பட்டுள்ள கற்றல் முறையியல்கள் சற்றேனும் பிசகாது அச்சொட்டாகப் பயன்படுத்துவதற்குரிவையன்று. பாடத்திட்டத்தின் தேர்ச்சிகள், தேர்ச்சி மட்டங்களை அடைவதற்காகப் பாடவிடயங்களின் மூலம் கற்றற் பேறுகளை அண்மிப்பதற்காகக் கற்றல் முறையியல்களை ஆக்கபூர்வமானதாக மாற்றியமைத்துக் கொள்வதற்கான சுதந்திரம் வசதி செய்து கொடுப்போருக்கு உண்டு என்பதில் ஐயமில்லை. மாணவரது அடைவுச் சதவீதத்தை உயரிய மட்டத்திற்கு இட்டுச் செல்ல உதவும் மற்றும் அதற்கான வசதிகளைச் செய்து கொடுக்கும் ஆசிரியரது வகிபாகத்திற்கு உந்துதலளிப்பதற்காகத் தயாரிக்கப்பட்டுள்ள ஆசிரியர் வழிகாட்டியை ஆசிரியர்கள் மட்டுமன்றி மாணவரும் பெற்றோரும் கூட பயன்படுத்தலாம். குறித்த பாடத்தின் பாடநூலுக்குத் துணையாக அமையும் ஒரு சாதனமான இவ்வாசிரியர் வழிகாட்டி, மற்றுமொரு பாடநூல் அன்று என்பதை அறிந்து பாடநூல், ஆசிரியர் வழிகாட்டி ஆகிய இரண்டையும் ஆசிரியர்கள் பயன்படுத்த வேண்டும்.

அந்தந்தப் பாடத்தின் அடைவு தொடர்பில், தேசிய நிலைப் பரீட்சகர்களால் எதிர்பார்க்கப்பெறும் அடைவுகளை, மாணவர்கள் அடைந்துள்ளனரா என்பது பற்றிப் பாடநிறைவில் வகுப்பறையில் வசதி செய்து கொடுப்பவர்களால் மதிப்பிடப் பெறுதல் வேண்டும். களிப்பூட்டத்தக்க செழுமையான பண்பாட்டைக் கட்டியெழுப்புவதற்கான ஒரு கருவியாக இவ்வாசிரியர் வழிகாட்டி அமைய வேண்டுமெனப் பிரார்த்திக்கின்றேன்.

**பீடாதிபதி, பிரதிப் பணிப்பாளர் நாயகம்**
**மொழிகள், மானுடவியல் மற்றும் சமூக விஞ்ஞான பீடம்**
**தேசிய கல்வி நிறுவகம்**

## கலைத்திட்டக் குழு

**ஆலோசனையும் வழிகாட்டலும் :**

கல்விசார் அலுவல்கள் சபை
தேசிய கல்வி நிறுவகம்

**பாட விடய ஆலோசனை :**

பேராசிரியர், கலாநிதி எஸ். யோகராஜா
கிழக்குப் பல்கலைக்கழகம்
திரு.க.இரகுபரன்
சிரேஷ்ட விரிவுரையாளர், தென் கிழக்குப் பல்கலைக்கழகம்
கலாநிதி ரமீஸ் அப்துல்லா, தலைவர், மொழிகள் பீடம்,
தென் கிழக்குப் பல்கலைக்கழகம்
கலாநிதி. ஸ்ரீ. பிரசாந்தன்
சிரேஷ்ட விரிவுரையாளர், ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகம்
செல்வி. வ. விஜயலெட்சுமி
பணிப்பாளர், தமிழ்மொழித் துறை, தேசிய கல்வி நிறுவகம்.

**இணைப்பாக்கம் :**

திரு. மு.தயாநிதி
சிரேஷ்ட விரிவுரையாளர், தமிழ்மொழித் துறை,
தேசிய கல்வி நிறுவகம்
திருமதி. நா.சீதரன்
சிரேஷ்ட விரிவுரையாளர், தமிழ்மொழித் துறை,
தேசிய கல்வி நிறுவகம்

**வளப் பங்களிப்பு :**

செல்வி. மாகிறித்தா வேதநாயகம்
சிரேஷ்ட ஆசிரியர், பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரி, கொழும்பு
திருமதி. இ. ரதி தேவசுந்தரம்
ஆசிரிய ஆலோசகர், வலயக் கல்வி அலுவலகம், கண்டி
திருமதி. த. நிறைமதி
ஆசிரிய ஆலோசகர், வலயக் கல்வி அலுவலகம்,
வவுனியா தெற்கு
திரு.ந.அருளானந்தம்
பிரதிக் கல்விப் பணிப்பாளர், வலயக் கல்வி அலுவலகம்,
மாத்தளை.
திரு.சி.கணபதிப்பிள்ளை
ஆசிரிய ஆலோசகர், வலயக் கல்வி அலுவலகம், ஹற்றன்.
ஜனாப். எம். ம.ஃறூப்
ஆசிரியர், கொத்தான்தீவு ம.வி
திரு. ந.யோகலிங்கம்
ஆசிரிய ஆலோசகர், வலயக் கல்வி அலுவலகம், இரத்தினபுரி

# ஆசிரியர் வழிகாட்டியைப் பயன்படுத்துவதற்கான அறிவுறுத்தல்கள்

2007 ஆம் ஆண்டு தொடக்கம் பாடசாலைகளில் கலைத்திட்டத்தில் தொகுதிப் பாடங்களுள் ஒன்றாக இருந்துவரும் 'இலக்கிய நயம்' எனும் பாடம் 2015 ஆம் ஆண்டிலும் அதன் பின்னரும் அதே விதமாக நடைமுறைப்படுத்தப்படும். 10 - 11 ஆந் தரங்களுக்காக வாரமொன்றுக்கு மூன்று பாடவேளைகள் ஒதுக்கப்பட்டுள்ளன. க.பொ.த. சாதாரண தரப் பரீட்சையில் 10 - 11 ஆம் தரங்களுக்குரிய பாடத்திட்டங்களை அடிப்படையாகக் கொண்டு மதிப்பீட்டை நடத்த எதிர்பார்க்கப்படுகின்றது.

10 - 11 ஆந் தரங்களுக்காக தேர்ச்சிகளை அடிப்படையாகக் கொண்ட அணுகுமுறையின் படி பிரதானமான நான்கு தேர்ச்சிகளின் கீழ் இலக்கிய நயம் பாடத்துக்கான கலைத்திட்டம் கட்டியெழுப்பப்பட்டுள்ளது. கலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக தயாரிக்கப்பட்டுள்ள இந்த ஆசிரியர் வழிகாட்டியானது பாடத்திட்டம், பாடத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்குரிய அறிவுறுத்தல்கள் எனும் இரண்டு பகுதிகளைக் கொண்டமைந்துள்ளது.

'இலக்கிய நயம்' எனும் பாடத்தின் மூலம் மாணவரிடத்தே கட்டியெழுப்ப எதிர்பார்க்கப்படும் தேர்ச்சிகளை விருத்தி செய்யும்போது, பாடங்களும் அப்பாடங்களைப் பயிலுவதற்காகப் பயன்படுத்தும் முறையியல்களும் முக்கியமானவை. இது தொடர்பாக ஆசிரியரின் பணிகளை இலகுபடுத்தும் பொருட்டு, சுருக்க விளக்கங்கள் தரப்பட்டுள்ளன. ஆசிரியர்கள் தமது ஆக்கவியல் திறமைகளைப் பயன்படுத்தி, வகுப்பறைத் தேவையின்படி, அவற்றை மேலும் விருத்தி செய்து கொள்வதோடு, புதிய செயற்பாடுகளையும் தயாரித்துக் கொள்ளலாம். 'இலக்கிய நயம்' எனும் இப்பாடத்தின் குறிக்கோள்களை அடையத்தக்க வகையில் செயற்பாடுகளை அடிப்படையாகக் கொண்ட கற்றல் சந்தர்ப்பங்களைத் திட்டமிட்டு வழங்குவதன் மூலம் பாடங்களைப் பயில்வதில் மாணவரை வழிப்படுத்துவதே இங்கு எதிர்பார்க்கப்படுவதாகும்.

அதற்கமைய 'இலக்கிய நயம்' எனும் பாடத்தின் குறிக்கோள்களை நிறைவு செய்தவாறு தேர்ச்சிமிக்க, புதிய உலகுக்குப் பொருத்தமான இளஞ் சந்ததியினரை உருவாக்குவதற்கு வழிகாட்டுவதே இந்த ஆசிரியர் வழிகாட்டியின் எதிர்பார்ப்பாகும்.

**நூலாக்கக் குழு**

# பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| | | பக்கம் |
| 01. | பணிப்பாளர் நாயகம் அவர்களின் செய்தி | iii |
| 02. | பிரதிப் பணிப்பாளர் நாயகம் அவர்களின் செய்தி | iv |
| 03. | கலைத்திட்டக் குழு | v |
| 04. | ஆசிரியர் வழிகாட்டியைப் பயன்படுத்துவதற்குரிய அறிவுறுத்தல்கள் | vi |
| 05. | பாடத்திட்டம் | viii |
| 06. | கற்றல் - கற்பித்தற் செயன்முறைக்குரிய வழிகாட்டல் | 1-36 |

# பாடத்திட்டம்

## தேசிய இலக்குகள்

தேசிய கல்வி முறைமையானது, தனிநபர்க்கும் சமூகத்திற்கும் பொருத்தமான பெரும்பாலான தேசிய இலக்குகளை அடைவதற்குத் தனிநபர்க்கும் குழுவினருக்கும் உதவி செய்தல் வேண்டும்.

கடந்த காலங்களில் இலங்கையின் பெரும்பாலான கல்வி அறிக்கைகளும் ஆவணங்களும் தனிநபர் தேவைகளையும் தேசிய தேவைகளையும் நிறைவு செய்வதற்காக இலக்குகளை நிர்ணயித்துள்ளன. சமகால கல்வி அமைப்புகளிலும் செயன்முறைகளிலும் வெளிப்படையாகக் காணப்படும் பலவீனங்கள் காரணமாக, நிலைபேறுடைய மனித விருத்தியின் எண்ணக்கருத்திட்ட வரம்பினுள் கல்வியினூடாக அடையக்கூடிய பின்வரும் இலக்குத் தொகுதியினை தேசிய கல்வி ஆணைக்குழு இனங்கண்டுள்ளது.

1. மனித கௌரவத்தைக் கண்ணியப்படுத்தல் எனும் எண்ணக்கருவுக்கள் தேசியப்பிணைப்பு, தேசிய முழுமை, தேசிய ஒற்றுமை, இணக்கம், சமாதானம் என்பவற்றை மேம்படுத்தல் மூலமும் இலங்கைப் பன்மைச் சமூகத்தின் கலாசார வேறுபாட்டினை அங்கீகரித்தல் மூலமும் தேசத்தைக் கட்டி எழுப்புதலும் இலங்கையர் எனும் அடையாளத்தை ஏற்படுத்தலும்.

2. மாற்றமுறும் உலகத்தின் சவால்களுக்குத் தக்கவாறு முகங்கொடுத்தலோடு, தேசிய பாரம்பரியத்தின் அதி சிறந்த அம்சங்களை அங்கீகரித்தலும் பேணுதலும்.

3. மனித உரிமைகளுக்கு மதிப்பளித்தல், கடமைகள், கட்டுப்பாடுகள் பற்றிய விழிப்புணர்வு, ஒருவர் மீது ஒருவர் கொண்டுள்ள ஆழ்ந்த, இடையறாத அக்கறையுணர்வு என்பவற்றை மேம்படுத்தும் சமூக நீதியும் ஜனநாயக வாழ்க்கைமுறை நியமங்களும் உள்ளடங்கிய சுற்றாடலை உருவாக்குதலும் ஆதரித்தலும்.

4. ஒருவரது உள, உடல் நலனையும் மனித விழுமியங்களுக்கு மதிப்பளிப்பதை அடிப்படையாகக் கொண்ட நிலைபேறுடைய வாழ்க்கைக் கோலத்தையும் மேம்படுத்தல்

5. நன்கு ஒன்றிணைக்கப்பட்ட சமநிலை ஆளுமைக்குரிய ஆக்க சிந்தனை, தற்றுணிபு, ஆய்ந்து சிந்தித்தல், பொறுப்பு, வகைகூறல் மற்றும் உடன்பாடான அம்சங்களை விருத்தி செய்தல்.

6. தனிநபரதும் தேசத்தினதும் வாழ்க்கைத் தரத்தைப் போசிக்கக் கூடியதும் இலங்கையின் பொருளாதார அபிவிருத்திக்குப் பங்களிக்கக் கூடியதுமான ஆக்கப் பணிகளுக்கான கல்வியூட்டுவதன் மூலம் மனிதவள அபிவிருத்தியை ஏற்படுத்தல்.

7. தனிநபர்களின் மாற்றத்திற்கு ஏற்ப, இணங்கி வாழவும் மாற்றத்தை முகாமை செய்யவும் தயார்படுத்தவும் விரைவாக மாறிவரும் உலகில் சிக்கலானதும், எதிர்பாராததுமான நிலைமைகளைச் சமாளிக்கும் தகைமையை விருத்தி செய்தல்.

8. நீதி, சமத்துவம், பரஸ்பர மரியாதை என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு, சர்வதேச சமுதாயத்தில் கௌரவமானதோர் இடத்தைப் பெறுவதற்குப் பங்களிக்கக்கூடிய மனப்பாங்குகளையும் திறன்களையும் வளர்த்தல்.

**(Njrpa fy;tp Mizf;FO mwpf;if - 2003 jpnrk;gu;)**

## அடிப்படைத் தேர்ச்சிகள்

கல்வியினூடாக விருத்தி செய்யப்படும் பின்வரும் அடிப்படைத் தேர்ச்சிகள் மேற்குறித்த தேசிய இலக்குகளை அடைவதற்கு வழிவகுக்கும்.

1. **தொடர்பாடல் தேர்ச்சிகள்**

   தொடர்பாடல் பற்றிய தேர்ச்சிகள் நான்கு துணைத் தொகுதிகளை அடிப்படையாகக் கொண்டவை. எழுத்தறிவு, எண்ணறிவு, சித்திர அறிவு, தகவல் தொழினுட்பத் தகைமை.

| | |
|---|---|
| எழுத்தறிவு: | கவனமாகச் செவிமடுத்தல், தெளிவாகப் பேசுதல், கருத்தறிய வாசித்தல், சரியாகவும் செம்மையாகவும் எழுதுதல், பயன்தரும் வகையிலான கருத்துப் பரிமாற்றம் |
| எண்ணறிவு: | பொருள், இடம், காலம் என்பவற்றுக்கு எண்களைப் பயன்படுத்தல், எண்ணுதல், கணித்தல், ஒழுங்கு முறையாக அளத்தல் |
| சித்திர அறிவு: | கோடு, உருவம் என்பவற்றின் கருத்தை அறிதல். விபரங்கள், அறிவுறுத்தல்கள், எண்ணங்கள் ஆகியவற்றை கோடு, உருவம், வர்ணம் என்பவற்றால் வெளிப்படுத்தலும் பதிவு செய்தலும் |
| தகவல் தொழினுட்பத் தகைமை: | கணினி அறிவு - கற்றலில், தொழில் சுற்றாடலில், சொந்த வாழ்வில் தகவல் தொடர்பாடல் தொழினுட்பங்களைப் (ICT) பயன்படுத்தல் |

2. **ஆளுமை விருத்தி தொடர்பான தேர்ச்சிகள்**

   - ஆக்கம், விரிந்த சிந்தனை, தற்றுணிபு, தீர்மானம் எடுத்தல், பிரச்சினை விடுவித்தல், நுணுக்கமான மற்றும் பகுப்பாய்வுச் சிந்தனை, அணியினராகப் பணி செய்தல், தனியாள் இடைவினைத் தொடர்புகள், கண்டுபிடித்தலும் கண்டறிதலும் முதலான திறமைகள்
   - நேர்மை, சகிப்புத் தன்மை, மனித கௌரவத்தைக் கண்ணியப்படுத்தல் ஆகிய விழுமியங்கள்
   - மன எழுச்சிகள், நுண்ணறிவு

3. **சூழல் தொடர்பான தேர்ச்சிகள்**

   இத்தேர்ச்சிகள் சூழலோடு (சமூகம், உயிரியல், பௌதிகம்) தொடர்புறுகின்றன.

| | |
|---|---|
| சமூகச் சூழல்: | தேசிய பாரம்பரியம் பற்றிய விழிப்புணர்வு, பன்மைச் சமூகத்தின் அங்கத்தவர்கள் என்ற வகையில் தொடர்புறும் நுண்ணுணர்வுத் திறன்களும், பகிர்ந்தளிக்கப்படும் நீதி, சமூகத் தொடர்புகள், தனிநபர் நடத்தைகள், பொதுவானதும் சட்டபூர்வமானதுமான சம்பிரதாயங்கள், உரிமைகள், பொறுப்புக்கள், கடமைகள், கடப்பாடுகள் என்பவற்றில் அக்கறையும் |
| உயிரியல் சூழல்: | வாழும் உலகு, மக்கள், உயிரியல் சூழல் தொகுதி - மரங்கள், காடுகள், கடல், நீர், வளி, உயிரின தாவரம், விலங்கு, மனித வாழ்வு |

பௌதிகச் சூழல்: இடம், சக்தி, எரிபொருள், சடப்பொருள், பொருள்கள் பற்றியும் அவை மனித வாழ்க்கை, உணவு, உடை, உறையுள், சுகாதாரம், சௌகரியம், சுவாசம், நித்திரை, இளைப்பாறுதல், ஓய்வு, கழிவுகள், உயிரின கழிவுப் பொருட்கள் ஆகியவற்றுடன் கொண்டுள்ள தொடர்பு பற்றிய விழிப்புணர்வும், நுண்ணுணர்வுத் திறன்களும் கற்றலுக்கும் வேலை செய்வதற்கும் வாழ்வதற்கும் கருவிகளையும் தொழினுட்பங்களையும் பயன்படுத்தும் திறன்களும் இங்கு உள்ளடக்கப்பட்டுள்ளன.

**4. வேலை உலகத்திற்கு தயார் செய்தல் தொடர்பான தேர்ச்சிகள்**

அவர்களது சக்தியை உச்ச நிலைக்குக் கொண்டு வருவதற்கும் அவர்களது ஆற்றலைப் போஷிப்பதற்கும் வேண்டிய தொழில்சார் திறன்கள்.

- பொருளாதார விருத்திக்குப் பங்களித்தல்
- அவர்களது தொழில் விருப்புகளையும் உளச்சார்புகளையும் கண்டறிதல்
- அவர்களது ஆற்றல்களுக்குப் பொருத்தமான வேலையைத் தெரிவு செய்தல்
- பயனளிக்கக் கூடியதும் நிலைபேறுடையதுமான ஜீவனோபாயத்தில் ஈடுபடல்

**5. சமயமும் ஒழுகலாறும் தொடர்பான தேர்ச்சிகள்**

அன்றாட வாழ்க்கையில் மிகப் பொருத்தமானவற்றைத் தெரிவு செய்யவும், நாளாந்த வாழ்க்கையில் ஒழுக்கநெறி, அறநெறி, சமயநெறி தொடர்பான நடத்தைகளைப் பொருத்தமுற மேற்கொள்ளவும் விழுமியங்களைத் தன்மயமாக்கிக் கொள்ளலும் உள்வாங்கலும்

**6. ஓய்வு நேரத்தைப் பயன்படுத்தல், விளையாட்டுப் பற்றிய தேர்ச்சிகள்**

அழகியற் கலைகள், இலக்கியம், விளையாட்டு, மெய்வல்லுநர் போட்டிகள், ஓய்வு நேரப் பொழுதுபோக்குகள் மற்றும் வாழ்வின் ஆக்கபூர்வச் செயற்பாடுகள் மூலம் வெளிப்படுத்தப்படும் இன்ப நுகர்ச்சி, மகிழ்ச்சி, மனவெழுச்சிகள் இவைபோன்ற மனித அனுபவங்கள்

**7. “கற்றலுக்குக் கற்றல்” தொடர்பான தேர்ச்சிகள்**

விரைவாக மாறுகின்ற, சிக்கலான, ஒருவரில் ஒருவர் தங்கி நிற்கின்ற உலகொன்றில் ஒருவர் சுயாதீனமாகக் கற்பதற்கான வலிமையளித்தலும் மாற்றியமைக்கும் செயன்முறை ஊடாக, மாற்றத்திற்கேற்ப இயங்கவும் அதனை முகாமை செய்யவும் வேண்டிய உணர்வையும் வெற்றியையும் பெறச் செய்தல்.

**(தேசிய கல்வி ஆணைக்குழு அறிக்கை - 2003 திசெம்பர்)**

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாட வேளை |
|---|---|---|---|---|
| 1.0 இலக்கியங்களை நயந்து, கருத்துக்களை வெளிப்படுத்துவார். | 1.1 பாடப்பகுதிகளை ஈடுபாட்டுடனும் குரல் ஏற்ற இறக்கத்துடனும் வாசிப்பார். | • உரைநடை இலக்கியங்கள் | • உரைநடை இலக்கியங்களை வாசித்து நயந்தவற்றைக் கூறுவார்.<br>• படைப்புக்களின் நோக்கங்களையும் ஆசிரியர் கூற வந்த விடயங்களையும் கூறுவார்.<br>• படைப்புக்களை விமர்சனம் செய்வார்.<br>- கையாளப்பட்ட மொழிநடை<br>• உரைநடை இலக்கியங்கள் ஊடாக வெளிப்படுத்தப்படும் கருத்துக்களைப் பகுத்து நோக்குவார்.<br>- படிப்பினை<br>- அறக்கருத்து<br>- விழுமியம்<br>- நகைச்சுவை<br>- சமூகப் பார்வை | 04 |
| | | • செய்யுள் இலக்கியங்கள் | • செய்யுள் இலக்கியங்களை வாசித்து நயந்தவற்றைக் கூறுவார்.<br>• ஆக்கத்தின் உருவ, உள்ளடக்கப் பொருத்தப்பாட்டினைக் கூறுவார்.<br>• இலக்கியத்தில் உள்ள சிறப்புக்களைக் குறிப்பிடுவார்.<br>- அணிகள்<br>- கற்பனை<br>- வர்ணனை<br>- மொழி<br>- ஆசிரியர் கூற வந்த விடயம்<br>- கையாளப்பட்ட மொழிநடை<br>• செய்யுள் இலக்கியங்கள் ஊடாக வெளிப்படுத்தப்படும் கருத்துக்களைப் பகுத்து நோக்குவார்.<br>- படிப்பினை - அறக்கருத்து - விழுமியம்<br>- நகைச்சுவை - சமூகப்பார்வை | 02 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாட வேளை |
|---|---|---|---|---|
| | 1.2 படைப்புகளை நயந்து, அதன் நோக்கங்கள் பற்றிக் கலந்துரையாடுவார். | • உரைநடை இலக்கியங்கள்<br>• செய்யுள் இலக்கியங்கள் | • படைப்புக்களை நயப்பார்.<br>• படைப்புக்களின் நோக்கங்களை இனங்காண்பார்.<br>- படைப்பாளியின் அனுபவ வெளிப்பாடு<br>- இரசனை வெளிப்பாடு<br>- சமூக நோக்கு<br>- விழுமியங்கள் | 03<br>05 |
| | 1.3 படைப்புகள் மூலமாக சமூகத்தையும் தான் வாழும் உலகத்தை - யும் விளங்கி, அவை பற்றிய கருத்துக்களை எடுத்துரைப்பார். | • உரைநடை இலக்கியங்கள்<br>• செய்யுள் இலக்கியங்கள் | • படைப்புக்கள் பற்றிய கருத்துக்களைப் பின்வருமாறு பகுத்து நோக்குவார்.<br>- தனிமனித இயல்புகள்<br>- குடும்ப உறவுகள்<br>- சமூக ஊடாட்டம்<br>- உலகப்போக்கு<br>- விழுமியங்கள் | 03<br>03 |
| | 1.4 விமர்சன நோக்குடன் படைப்புப் பற்றிய கருத்துக்களை முன் வைப்பார். | • உரைநடை இலக்கியங்கள்<br>• செய்யுள் இலக்கியங்கள் | • விமர்சன நோக்குடன் படைப்புப் பற்றிய கருத்துக்களை முன் வைப்பார்.<br>- இலக்கியம் கூற முனையும் கருத்துக்கள்<br>- தனிமனித இயல்புகள், குடும்பம், சமூகம் பற்றிய பார்வை<br>- கையாளப்பட்ட உத்திகள்<br>- பாத்திரங்கள்<br>- மொழிநடை | 03<br>03 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாட வேளை |
|---|---|---|---|---|
| 2.0 இலக்கியங்-களைக் கற்று மொழியாற்றலை வெளிப்படுத்து வார். | 2.1 படைப்புக்களில் வெளிப்படும் மொழிப் பிரயோகங் களை நன்கு கிரகித்து விடை - யளிப்பார். | • உரைநடை இலக்கியங்கள்<br>• செய்யுள் இலக்கியங்கள் | • படைப்புக்களின் முக்கிய மொழிப் பிரயோகங்களைத் தொகுத்துக் கூறுவார்.<br>- சொல்லாட்சிகள்<br>- பாத்திர மனவுணர்வுகள்<br>- அரும்பதங்கள்<br>- அணிகள்<br>- பேச்சு வழக்கு, எழுத்து வழக்கு<br>- கிளை மொழி | 03<br>04 |
| | 2.2 பாடப் பகுதியின் ஊடாகப் பெற்ற மொழியாற்றலைப் பிரயோகிப்பார். | • உரைநடை இலக்கியங்கள்<br>• செய்யுள் இலக்கியங்கள் | • இலக்கியங்களைக் கற்று, அவற்றில் உள்ள மொழிநடையை இனங்கண்டு பிரயோகிப்பார்.<br>- செய்யுள் நடை / வசன நடை<br>- பேச்சு வழக்கு, எழுத்து வழக்கு<br>- கிளை மொழி<br>- பாத்திர மனவுணர்வுகள்<br>- அரும்பதங்கள்<br>- அணிகள் | 02<br>02 |
| 3.0 பல்வேறுபட்ட படைப்புக்களை வாசிப்பதன் மூலமாகத் தரம் வாய்ந்த ஆக்கங்களைப் படைப்பார். | 3.1 பல்வேறுபட்ட படைப்புக்களை ஆர்வத்துடன் வாசிப்பார். | • உரைநடை இலக்கியங்கள்<br>• கவிதை / செய்யுள் | • பல்வேறுபட்ட படைப்புக்களை இனங்கண்டு அவற்றை வாசிப்பார்.<br>- கவிதை / செய்யுள்<br>- கதை, சிறுகதை<br>- கட்டுரை<br>- நாடகங்கள் | 03<br>03 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாட வேளை |
|---|---|---|---|---|
| | 3.2 படைப்புக்கள் குறித்து சிந்தித்து, கலந்துரை-யாடி, தமது ஆர்வத் -திற்கும் ஆற்றலுக்கும் கற்பனைத் திறனுக்கும் ஏற்புடைய வேறுபட்ட ஆக்கங்களைப் படைப்பார். | • உரைநடை இலக்கியங்கள்<br>• கவிதை / செய்யுள் | • வேறுபட்ட புதிய ஆக்கங்களைப் படைக்க முன்வருவார்.<br>- கவிதை / செய்யுள்<br>- கதை / சிறுகதை<br>- கட்டுரை<br>- நாடகங்கள் | 02<br>03 |
| 4.0 இலக்கிய அனுபவத்தின் மூலம் வாழ்வை மேம்படுத்துவார். | 4.1 இலக்கியங்களினூடாக வெளிப்படும் கருத்துக்களைப் பகுத்து நோக்குவார். | • உரைநடை இலக்கியங்கள்<br>**அல்லது**<br>• செய்யுள் இலக்கியங்கள் | • இலக்கியங்களினூடாக வெளிப்படும் கருத்துக்களைப் பகுத்து நோக்குவார்.<br>- அறக் கருத்துக்கள்<br>- விழுமியங்கள்<br>- நகைச்சுவை உணர்வு<br>- தத்துவங்கள்<br>- படிப்பினைகள்<br>- சமூகப் பார்வை<br>- வாழ்வியல் அம்சங்கள் | 05 |
| | 4.2 இலக்கியங்கள் நடைமுறை வாழ்க்கையோடு தொடர்புபடுமாற்றை விளக்குவார். | • உரைநடை இலக்கியங்கள்<br>**அல்லது**<br>• செய்யுள் இலக்கியங்கள் | • இலக்கியங்கள் குறிப்பிடும் வாழ்வியல் அம்சங்களை இனங்கண்டு பின்பற்றுவார்.<br>- அறக் கருத்துக்கள்<br>- விழுமியங்கள்<br>- நகைச்சுவை உணர்வு<br>- மானுடநேயம்<br>- பொறுப்புணர்வு<br>- படிப்பினைகள்<br>- சமூகப் பார்வை<br>- வாழ்வியல் அம்சங்கள்<br>- புரிந்துணர்வு | 12 |
| | | | | 65 |

# கற்றல் - கற்பித்தற்
# செயன்முறைக்குரிய வழிகாட்டல்

| இல. | தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | | |
|---|---|---|---|---|---|
| 01 | 1.0 | 1.1 | உரைநடைப் பகுதி | - | உரிமையும் கடமையும் |
| 02. | 1.0 | 1.1 | செய்யுட் பகுதி | - | நாட்டார் பாடல்: மருத்துவச்சி வாழ்த்து |
| 03. | 1.0 | 1.2 | உரைநடைப் பகுதி | - | சிறுகதை: தாய்ப்பசு |
| 04. | 1.0 | 1.2 | செய்யுட் பகுதி | - | விவேகசிந்தாமணி |
| 05. | 1.0 | 1.3 | உரைநடைப் பகுதி | - | பத்தி எழுத்துக்கள்: அ. மரம் என்பது உயர்திணை |
| 06. | 1.0 | 1.3 | செய்யுட் பகுதி | - | கவிதை: புதுமைப்பெண்ணாய் மாறிடுவோம் |
| 07. | 1.0 | 1.4 | உரைநடைப் பகுதி | - | சிறுகதை: எலியம் |
| 08. | 1.0 | 1.4 | செய்யுட் பகுதி | - | கவிதை: புத்தகசாலை |
| 09. | 2.0 | 2.1 | உரைநடைப் பகுதி | - | பத்தி எழுத்துக்கள் ஆ. மென்மையே வாழும் |
| 10. | 2.0 | 2.1 | செய்யுட் பகுதி | - | இனிது என.... : அ. முளிதயிர் பிசைந்த காந்தள்... ஆ. தங்க வளையல் |
| 11. | 2.0 | 2.2 | உரைநடைப் பகுதி | - | ஏற்கனவே, தே.ம.1.3 இல் கற்பித்த விடயங்களை அடிப்படையாகக் கொள்க. |
| 12. | 2.0 | 2.2 | செய்யுட் பகுதி | - | ஏற்கனவே, தே.ம.1.1 இல் கற்பித்த விடயங்களை அடிப்படையாகக் கொள்க. |
| 13. | 3.0 | 3.1 | உரைநடைப் பகுதி | - | ஏற்கனவே, தே.ம.1.2 இல் கற்பித்த விடயங்களை அடிப்படையாகக் கொள்க. |
| 14. | 3.0 | 3.1 | செய்யுட் பகுதி | - | ஏற்கனவே, தே.ம.1.2 இல் கற்பித்த விடயங்களை அடிப்படையாகக் கொள்க. |
| 15. | 3.0 | 3.2 | உரைநடைப் பகுதி | - | ஏற்கனவே, தே.ம.1.1 இல் கற்பித்த விடயங்களை அடிப்படையாகக் கொள்க. |
| 16. | 3.0 | 3.2 | செய்யுட் பகுதி | - | ஏற்கனவே, தே.ம.1.3 இல் கற்பித்த விடயங்களை அடிப்படையாகக் கொள்க. |
| 17. | 4.0 | 4.1 | செய்யுட் பகுதி | - | திருக்குறள் |
| 18. | 4.0 | 4.2 | செய்யுட் பகுதி | - | கம்பராமாயணம் |

## முதலாந் தவணை

| இல. | தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | | பக். |
|---|---|---|---|---|---|
| 01. | 1.0 | 1.4 | செய்யுட் பகுதி - (கவிதை) | புத்தகசாலை | 02 |
| 02. | 1.0 | 1.3 | உரைநடைப் பகுதி - (பத்தி எழுத்து) | மரம் என்பது உயர்திணை | 05 |
| 03. | 2.0 | 2.1 | உரைநடைப் பகுதி - (பத்தி எழுத்து) | மென்மையே வாழும் | 08 |
| 04. | 2.0 | 2.2 | உரைநடைப் பகுதி - | ஏற்கனவே, தே.ம.1.3 இல் கற்பித்த விடயங்களை அடிப்படையாகக் கொள்க. | 10 |
| 05. | 1.0 | 1.1 | செய்யுட் பகுதி - (நாட்டார் பாடல்) | மருத்துவச்சி வாழ்த்து | 11 |
| 06 | 2.0 | 2.2 | செய்யுட் பகுதி - | ஏற்கனவே, தே.ம.1.1 இல் கற்பித்த விடயங்களை அடிப்படையாகக் கொள்க. | 13 |
| 07 | 2.0 | 2.1 | செய்யுட் பகுதி - (கவிதை) | இனிது என......<br>1. முளி தயிர் பிசைந்த காந்தள்....<br>2. தங்க வளையல் | 15 |

**தேர்ச்சி 1.0 :** இலக்கியங்களை நயந்து கருத்துக்களை வெளிப்படுத்துவார்.

**தேர்ச்சி மட்டம் 1.4 :** விமர்சன நோக்குடன் படைப்புப் பற்றிய கருத்துக்களை முன்வைப்பார்.

**விடய உள்ளடக்கம்:** கவிதை: புத்தகசாலை

**பாடவேளை:** 03

**கற்றற் பேறுகள்:**

- கவிதையைப் பொருள் விளங்கி வாசிப்பார்.
- கவிதையின் மையக்கருத்தைக் கூறுவார்.
- புத்தகங்கள் வாசிப்பதனால் ஏற்படும் பயன்கள் பற்றிக் கவிஞர் கூறுவனவற்றைத் தொகுத்துக் கூறுவார்.
- புத்தகசாலை அதன் அமைப்பிலும், பண்பிலும் எவ்வாறு அமைதல் வேண்டும் என்பது பற்றி எடுத்துரைப்பார்.
- மனித மன விசாலத்திற்குப் புத்தகசாலை உதவுமாற்றை விபரிப்பார்.
- கவிதையை நயந்து வாசித்து விமர்சனம் செய்வார்.
- உவமை முதலான அணிகளை இனங்கண்டு விபரிப்பார்.
- ஆசிரியர் கையாண்ட எடுத்துரைப்பு முறையினை விபரிப்பார்.
- வேறு ஆக்கங்களை விமர்சிக்கும் திறனை வெளிப்படுத்துவார்.

**பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான ஆலோசனைகள்:**

- பாரதிதாசன் பற்றிய குறிப்புக்களைக் கூறிக் கலந்துரையாடுதல்.
- புத்தகசாலை என்ற தலைப்பிலான கவிதையை, மாணவர் ஒவ்வொருவரையும் தனித்தனியாக வாசிக்கச் செய்தல்.
- அருஞ்சொற்களின் பொருளைக் கூறுதல்.
- கவிதையை நயந்து வாசிக்கச் செய்தல்.
- கவிதையினூடாக கவிஞர் புத்தகங்கள், புத்தகசாலை ஆகியன பற்றி எவற்றைக் கூற முற்படுகின்றார் என்பது பற்றி மாணவர்களுடன் கலந்துரையாடுதல்.
- மாணவர்களைக் குழுக்களாக்கி, கவிதையின் உள்ளடக்கம், தலைப்பின் பொருத்தப்பாடு, மொழிநடை தொடர்பான விளக்கத்தைக் கூற வழிப்படுத்தல்.
- அணிகளை இனங்காணச் செய்தல்.
- மாணவர் தமது விமர்சனத்தை முன்வைக்கச் சந்தர்ப்பம் வழங்குதல்.
- ஒப்பியல் நோக்கில் பிற கவிதைகளுடன் தொடர்புபடுத்தி நோக்குதல்.

  **உ-ம்:**

  பாரதியாரின் " வீடுதோறும் கலையின் விளக்கம்....."

  " இன்ன றுங்கனிச் சோலைகள் செய்தல்...."
- பாடசாலையிலுள்ள நூலகத்தோடு தொடர்புபடுத்திக் கலந்துரையாடச் செய்தல்.
- பொருத்தமான கணிப்பீடு, மதிப்பீடுகளை மேற்கொள்ளல்.

## முதன்மைப் பதங்கள் (Key words) / எண்ணக்கருக்கள்:

- **பாரதிதாசன் பற்றிய விளக்கம்**

- இயற்பெயர் கனக சுப்புரெத்தினம்
- பாரதிமேல் கொண்ட ஈடுபாட்டினால் பாரதிதாசன் எனத் தன்னைக் குறிப்பிட்டுக் கொண்டமை
- சமூக விழிப்புணர்வுடனும் மொழிச்சிந்தனையுடனும், அரசியல் உணர்வுடனும் கவிதைகளை எழுதியுள்ளமை

- **கவிதையின் நோக்கம் பற்றிய விளக்கம்**
  - கவிதை பற்றிய விளக்கம்
  - புத்தகங்களை வாசிப்பதனால் ஏற்படும் உணர்வு - சிந்தனை விரிவு
  - புத்தகசாலை என்பது நூல் நிலையத்தைக் (நூலகம்) குறிக்கின்றது.
  - அனைத்து இடங்களிலும் புத்தகசாலை அமைய வேண்டியதன் அவசியம்
  - தமிழுக்கு தமிழ்மொழியில் புத்தகசாலை எங்கும் அமைய வேண்டும்.
  - பிறமொழியிலுள்ள நூல்களைத் தமிழாக்கம் செய்ய வேண்டியதன் அவசியம்.
  - புத்தகசாலை எவ்வாறு அமைதல் வேண்டும் என்பதன் விளக்கம்
  - புத்தகசாலைக்கு வருவோருக்குச் செய்ய வேண்டியவை பற்றிய விளக்கம்
  - சமுதாய மறுமலர்ச்சி அடைதல் பற்றிய கருத்துக்கள்

- கவிதையை விமர்சனம் செய்யும் முறை பற்றிய விளக்கம்
- பாரதியின் கவிதையுடன் ஒப்பு நோக்கி விளக்கல்
- கவிஞரின் கவித்துவ ஆற்றல்
- அணிகள் பற்றிய விளக்கம்

- **அரும்பத விளக்கம்**

| | | |
|---|---|---|
| சையோகம் | - | ஒன்றிப்பு |
| சுவடிச்சாலை | - | புத்தகசாலை |
| நாட்டில் யாண்டும் | - | நாட்டில் எவ்விடத்தும் / எல்லாவிடத்திலும் |
| சர்வகலாசாலை | - | பல்கலைக்கழகம் |
| கோலமுறும் செய்தித்தாள் | - | விதம் விதமான பத்திரிகை |
| முடி | - | தலை |
| இருக்கை | - | ஆசனம் |
| சனித்து | - | உருவாதல் |
| ஆசித்த | - | கேட்டுக் கொண்ட |
| மகாசோதி | - | பேரொளி |

## தரவிருத்தி உள்ளீடுகள்:

- புத்தகசாலை - பாடநூல்
- பாரதிதாசனின் கவிதைகள் - புத்தகம்
- அகராதி
- எழுதுதாள், எழுதுகருவிகள்

## கணிப்பீடும் மதிப்பீடும் தொடர்பான ஆலோசனைகள்:

- கவிதையைப் பொருள் விளங்க வாசிப்பார்.
- கவிதையின் மையக்கருத்தைக் கூறுவார்.
- கவிஞனின் சிந்தனை வெளிப்பாட்டை விபரித்து எழுதுவார்.
- கவிதையில் நயந்த பகுதிகளை விபரிப்பார்.
- அணிகளை இனங்கண்டு எழுதுவார்.
- கவிதையை விமர்சித்து கருத்துக்களை முன்வைப்பார்.
- பல்வேறு ஆக்கங்களை விமர்சித்து எழுதுவார்.

- தாம் சுயமாகக் கவிதைகளை ஆக்குவார்.

**தேர்ச்சி** 1.0: இலக்கியங்களை நயந்து கருத்துக்களை வெளிப்படுத்துவார்.

**தேர்ச்சி மட்டம்** 1.3: படைப்புக்கள் மூலமாக சமூகத்தையும் தாம் வாழும் உலகத்தையும் விளங்கி, அவை பற்றிய கருத்துக்களை எடுத்துரைப்பார்.

**விடய உள்ளடக்கம்**: பத்தி எழுத்துக்கள்:
மரம் என்பது உயர்திணை

**பாடவேளை**: 03

**கற்றற் பேறுகள்:**

- உரைப் பகுதியைக் கருத்தூன்றி வாசிப்பார்.
- உரைப்பகுதியின் மையக்கருத்தை இனங்கண்டு எழுதுவார்.
- துணைக்கருத்துக்களை விபரிப்பார்.
- தர்க்கரீதியாகக் கருத்துக்களை முன்வைப்பார்.
- நயந்த பகுதியை விபரிப்பார்.
- பத்தி எழுத்துக்கள் என்றால் என்ன என்பது பற்றிக் கூறுவார்.
- உரையை வாசிப்பதனூடாக, சமூக நிலையை விளங்கி, கருத்துக்களை முன்வைப்பார்.
- விழுமிய சிந்தனைகளை வெளிப்படுத்தும் ஆக்கங்களைப் படைப்பார்.

**பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான ஆலோசனைகள்:**

- கட்டுரை பற்றியும் கட்டுரையாசிரியர் பற்றியும் விளக்கமளித்தல்.
- பத்தி எழுத்துக்கள் என்றால் என்ன என்பது பற்றிக் கலந்துரையாடல்.
- மாணவர்களைக் குழுநிலையில் அமரச் செய்து, தனித்தனியாகக் கட்டுரையைக் கருத்தூன்றி வாசிக்கச் செய்தல்.
- உரைப்பகுதி பற்றிய குறிப்புக்களை எடுக்க வழிப்படுத்தல்.
- உரைப்பகுதியை வாசித்து, பின்வருவன பற்றிக் கலந்துரையாடல்.
  - மையக்கருத்து
  - துணைக்கருத்து
  - சொல்லாட்சி
  - எழுத்து, நடை
- மையக்கருத்து, துணைக்கருத்துக்களை இனங்கண்டு எழுதச் செய்தல்.
- குழுக்களுள் ஒருவரை எழுமாறாக அழைத்து மையக்கருத்து, துணைக்கருத்துக் களைக் கூறச்செய்தல்.
- மனிதன், மரங்கள் பற்றி ஒப்பிட்டு விபரித்தல்.
- உரைப்பகுதியை வாசித்ததன் மூலம் பெற்றுக்கொண்ட புதிய செய்திகள், அனுபவங்கள் பற்றிக் கலந்துரையாடல்.
- பொருத்தமான கணிப்பீடு, மதிப்பீட்டினை மேற்கொள்ளல்.

**முதன்மைப் பதங்கள் (Key words) / எண்ணக்கருக்கள்:**

- அப்துல் ரஹ்மான் பற்றிய குறிப்புக்கள்
- பத்தி எழுத்துக்கள் என்றால் என்ன என்பது பற்றிய விளக்கம்
  - ஏதேனும் ஒரு விடயம் பற்றிப் பத்திரிகைகள், சஞ்சிகைகளில் எழுதப்படுகின்ற கருத்துரைகள் பத்தி எழுத்துக்கள் எனப்படுகின்றன.
  ‘Column writting’ தமிழில் பத்தி எழுத்துக்கள் என வழங்கப்படுகின்றன.
- உரைப்பகுதி பற்றிய விளக்கம்
- **மரங்களினால் மனிதனுக்கு கிடைக்கப்பெறும் பயன்கள்**
  - நிழல்
  - தாகத்திற்குப் பானம்
  - பசிக்கு உணவு
  - நோய்க்கு மருந்து
  - உடுத்த உடை
  - வசிக்க வீடு
  - சுவாசத்திற்கான காற்று
  - மழைக்கு ஆதாரம்
- **மனித வாழ்க்கைப் பாதையில் மரங்கள்**

  குழந்தைப் பருவம் - தொட்டில்
  நடை பழகும் பருவம் - நடைவண்டி
  பள்ளிப்பருவம் - ஏடுகள்
  பயணத்தில் - சக்கரங்கள்
  கிழப்பருவம் - ஊன்றுகோல்
  மரணத்தின் பின் - பாடை, சிதை
- **வரலாற்றுப் பாதையில் மரங்களின் உபயோகம்**
  - போதி மரங்கள்
  - காவல் மரங்கள்
  - ஊர்ப் பொதுமன்ற மரங்கள்
  - வசந்த மரங்கள்
  - கல்லால மரங்கள்
- **மரம், மனிதன் பற்றிய ஒப்பீடு**

| மரம் | மனிதன் |
|---|---|
| • மனிதனுக்கு பல்வேறு பயன்களைக் கொடுக்கிறது. | • மரங்களை அழிக்கின்றான். உ-ம்: கோடரி செய்தல் |
| • மண் மரத்திற்குக் கருவறை. | • மண் மனிதனுக்குப் புதைகுழி. |
| • பிறந்த இடத்தில் பற்று வைத்து வரவு வைப்பவை. | • பிறந்த இடத்தைச் செலவு செய்பவன். |
| • சரிந்த மரம் காட்டிலிருந்து வீட்டிற்குப் போகிறது. | • சரிந்த மனிதன் வீட்டிலிருந்து காட்டுக்குப் போகிறான். |
| • புழுதியில் பூக்களும் கழிநீரில் கனிகளும் செய்கின்றன. | • பூக்களில் புழுதியையும் கனிகளில் கழிநீரையும் செய்கிறான். |
| • எல்லாமே சிபிகள்; சீதக்காதிகள் | • ஒரேயொரு சிபி; ஒரேயொரு சீதக்காதி |
| • கொடுப்பதற்காக கைகளை நீட்டுகின்றன. | • வாங்குவதற்காக கைகளை நீட்டுகின்றான். |
| • வானத்தை நோக்கி வளர்கின்றன. | • புழுதியில் புரளுகின்றான். |

- **மனிதன் படைத்த மரங்கள்**
  - தூக்கு மரங்கள்
  - சிலுவை மரங்கள்
  - கழுமரங்கள்
  - கொடிமரங்கள்

- மனிதனை விட, மரமே சிறந்தது என்ற கருத்தை வலியுறுத்தும் வகை
- மரம் என்பது உயர்திணை என்பதற்குரிய ஆதாரமான கருத்துக்கள்
- உரையாசிரியர், உரைப்பகுதியை விபரிப்பதற்குக் கையாண்ட உத்திகள்

- **அரும்பத விளக்கம்**

| | | |
|---|---|---|
| சாலை | - | பாதை |
| அத்தாணி மண்டபம் | - | அரசனின் கொலு மண்டபம் |
| அம்பறாத்துணி | - | அம்புக்கூடு |
| தருக்கள் | - | மரங்கள் |
| சிபி | - | சிபிச்சக்கரவர்த்தி |
| சீதக்காதி | - | கொடை வள்ளல்களில் ஒருவர் |
| மாமிசபட்சணி | - | இறைச்சி (புலால்) உண்பவை |

## தரவிருத்தி உள்ளீடுகள்:

- பாடநூல்
- எழுதுகருவிகள்
- எழுதுதாள்

## கணிப்பீடும் மதிப்பீடும் தொடர்பான ஆலோசனைகள்:

- உரைப் பகுதியைப் பொருள் விளங்க வாசிப்பார்.
- உரையின் மையக்கருத்தைக் கூறுவார்.
- உரையில் நயந்த பகுதிகளை விபரிப்பார்.
- உரையாசிரியர் தன் கருத்துக்களை வலியுறுத்துவதற்குக் கையாண்ட உத்திகளை எடுத்துரைப்பார்.
- உரைப்பகுதியில் குறிப்பிடப்படும் விழுமியக் கருத்துக்களை வாழ்வில் கடைப்பிடிப்பார்.
- தாமும் விழுமிய சிந்தனைகளை வெளிப்படுத்தும் ஆக்கங்களைப் படைப்பார்.

**தேர்ச்சி** 2.0: இலக்கியங்களைக் கற்று, மொழியாற்றலை வெளிப்படுத்துவார்.

**தேர்ச்சி மட்டம்** 2.1: படைப்புக்களில் வெளிப்படும் மொழிப்பிரயோகங்களை நன்கு கிரகித்து விடையளிப்பார்.

**விடய உள்ளடக்கம்**: உரைப் பகுதி: மென்மையே வாழும்

**பாடவேளை**: 03

**கற்றற் பேறுகள்:**

- உரைப் பகுதியைக் கருத்தூன்றி வாசிப்பார்.
- உரையின் மையக்கருத்தினை இனங்கண்டு எழுதுவார்.
- துணைக்கருத்துக்களை இனங்கண்டு எழுதுவார்.
- அறிஞர் பற்றி அறிந்து எழுதுவார்.
- வாசித்த விடயம் தொடர்பான மொழியாற்றலைத் தமது ஆக்கங்களில் வெளிப்படுத்துவார்.
- மொழிநடை, எடுத்துரைப்பு முறை என்பவற்றை அறிந்து விடையளிப்பார்.
- பத்தி எழுத்துக்கள் பற்றி விபரித்துக் கூறுவார்.
- தர்க்க ரீதியான கருத்துக்களை முன்வைப்பார்.

**பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான ஆலோசனைகள்:**

- மாதிரி உரைப்பகுதி ஒன்றினை, மாணவர்களுக்கு வழங்கி, அதனை வாசிக்கச் செய்தல்.
- வாசித்த உரைப்பகுதியிலுள்ள பின்வரும் விடயங்கள் பற்றிக் கலந்துரையாடல்.
  - மையக்கருத்து
  - துணைக்கருத்துக்கள்
  - மொழிப்பிரயோகம்
  - தர்க்கரீதியான மொழியமைப்பு
- உரைப் பகுதியை ஒவ்வொரு மாணவரும் வாசித்துக் கிரகிக்க வழிகாட்டுதல்.
- வாசித்துக் கிரகித்தவற்றுக்குக் குறிப்பு எழுதச் செய்தல்.
- மாணவர்களுள் ஒருவரை எழுமாறாக அழைத்து மையக்கருத்து, துணைக் கருத்துக்களைச் கூறச் செய்தல்.
- உரையின் மொழிநடை பற்றி கூறச் செய்தல்.
- உரைப்பகுதியை வாசிப்பதன் மூலம் பெற்றுக் கொள்ளக்கூடிய பண்புகள் பற்றிக் கலந்துரையாடல்.
- பொருத்தமான கணிப்பீடு, மதிப்பீட்டினை மேற்கொள்ளல்.

**முதன்மைப் பதங்கள் (Key words) / எண்ணக்கருக்கள்:**

- டார்வின், கன்பூஷியஸ் ஆகிய தத்துவஞானிகள் பற்றிய விளக்கம்
- உரைப்பகுதியின் நோக்கம் பற்றிய விளக்கம்
- உரைப்பகுதியின் உள்ளடக்கம் பற்றிய விபரிப்பு
- 'மென்மையே வாழும்' என்பதை வலியுறுத்துவதற்குக் கூறப்படும் காரணங்கள்
  - நாக்கு - பல் பற்றிய ஒப்பீடு
  - காற்றும் புயலும் பற்றிய விளக்கம்
  - வெப்பமும் ஒளியும் பற்றிய விளக்கம்
  - உடலும் எக்ஸ் கதிர்களும் பற்றிய விளக்கம்
  - போரில் வலிமையும் மென்மையும் இயங்கும் பாங்கு
  - ஆணையும் பெண்ணையும் ஒப்பிடுதல்

- **அரும்பத விளக்கம்**

| | | |
|---|---|---|
| டார்வின் | - | பரிணாம வளர்ச்சி பற்றிக் கூறியவர் |
| கன்பூஷியஸ் | - | சீன தத்துவஞானி |
| அற்பாயுசு | - | குறைந்த ஆயுள் |
| தீர்க்காயுசு | - | நீண்ட ஆயுள் |
| வதன வனப்பு | - | முக அழகு |

**தரவிருத்தி உள்ளீடுகள்:**

- கட்டுரை - மென்மையே வாழும்
- இது சிறகுகளின் நேரம் - விகடன் பிரசுர நூல்
- பொருநராற்றுப்படை - நூல்
- திருக்குறள் - நூல்
- எழுது தாள், எழுது கருவிகள்

**கணிப்பீடும் மதிப்பீடும் தொடர்பான ஆலோசனைகள்:**

- உரையைப் பொருள் விளங்கி வாசிப்பார்.
- உரைப்பகுதியின் மையக்கருத்தைக் கூறுவார்.
- உரையாசிரியர் தன் கருத்தை நிறுவுவதற்குக் கையாண்ட உத்திகளைக் கூறுவார்.
- உரைப்பகுதியில் கூறப்பட்டுள்ள கருத்துக்களை விமர்சிப்பார்.
- உரைப்பகுதியில் கையாளப்பட்டுள்ள மேற்கோள்களுக்கான நூல்களைத் தேடி வாசிப்பார்.
- சுயமாகப் பத்தி எழுத்துக்களை எழுதுவார்.

**தேர்ச்சி** 2.0 : இலக்கியங்களைக் கற்று, மொழியாற்றலை வெளிப்படுத்துவார்.

**தேர்ச்சி மட்டம்** 2.2 : பாடப்பகுதியினூடாகப் பெற்ற மொழியாற்றலைப் பிரயோகிப்பார்.

**விடய உள்ளடக்கம்** : மரம் என்பது உயர்திணை
(ஏற்கனவே, தேர்ச்சி மட்டம் 1.3 இல் கற்பித்த பாடம்)

**பாடவேளை** : 02

### கற்றற் பேறுகள்:

- வாசித்து விடயங்களைத் தலைப்பிட்டுப் பட்டியற்படுத்துவார்.
- பட்டியற்படுத்திய விடயங்களைத் தொகுத்து நோக்குவார்.
- தொகுத்த விடயங்களைப் பகுதிகளாகப் பகுத்து நோக்குவார்.
- எடுத்துக்கொண்ட தலைப்பிற்கேற்ப விடயங்களை விளக்கி, ஆக்கங்களை முன்வைப்பார்.
- இது போன்ற வேறு பத்தி ஆக்கங்களைப் படைப்பார்.

### பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான ஆலோசனைகள்:

- மாணவர்களை, "மரம் என்பது உயர்திணை" உரைப்பகுதியைக் கருத்தூன்றி வாசிக்கச் செய்தல்.
- வாசித்த விடயங்கள் பற்றிக் கலந்துரையாடல்.
- தேவையான விளக்கங்களை வழங்கி வழிப்படுத்தல்.
- பின்வரும் விடயங்களை மாணவர்களுடன் கலந்துரையாடல்.
  - உரைப்பகுதியின் தலைப்பு
  - தலைப்பிற்கேற்ப கூறப்பட்டுள்ள விடயங்கள்
- மாணவர்களுக்கு உரைப்பகுதியின் உள்ளடக்க விடயங்களைத் தழுவிய சில தலைப்புகளை வழங்கி, அவை தொடர்பான உரைப்பகுதிகளைப் புதிதாக ஆக்க வழிகாட்டுதல்.
- மாணவர்கள் எழுதிய உரைப்பகுதிகளைப் பார்வையிட்டு, பொருத்தமான ஆலோசனை வழங்குதல்.
- பொருத்தமான கணிப்பீடு, மதிப்பீடுகளைத் திட்டமிட்டு மேற்கொள்ளுதல்.

### முதன்மைப் பதங்கள் (Key words) / எண்ணக்கருக்கள்:

- மரங்கள் மனிதனுக்குப் பல வகைகளில் உதவுகின்றன.
- மனிதனின் வாழ்க்கைப் பாதையில் மரங்களின் பயன்பாடு ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் முக்கியத்துவம் பெறுகிறது; அவனுக்குப் பல வகையில் பயன் தருகிறது.
- மரத்திற்கும் மனிதனுக்கும் இடையில் பல்வேறு வேறுபாடுகள் உள்ளன. அனைத்து விதத்திலும் மரம் உயர்ந்து நிற்கிறது. ஆகவே, மரம் உயர்திணை எனக் கருதப்படுகிறது.

### தரவிருத்தி உள்ளீடுகள்:

- பாடநூல்
- எழுது தாள்கள்

### கணிப்பீடும் மதிப்பீடும் தொடர்பான ஆலோசனைகள்:

- உரையிலுள்ள விடயங்களை வாசித்துத் தொகுத்து நோக்குவார்.
- தொகுத்த விடயங்கள் பற்றி கருத்துக்களைக் கூறுவார்.
- விடயங்களுக்கு ஏற்ப, சில தலைப்புக்களைக் குறிப்பிட்டு, தர்க்க ரீதியாகக் கருத்துக்களை முன்வைப்பார்.

**தேர்ச்சி** 1.0 : இலக்கியங்களை நயந்து, கருத்துக்களை வெளிப்படுத்துவார்.

**தேர்ச்சி மட்டம்** 1.1 : படைப்புக்கள் மூலமாகச் சமூகத்தையும் தான் வாழும் உலகத்தையும் விளங்கி, அவை பற்றிய கருத்துக்களை எடுத்துரைப்பார்.

**விடய உள்ளடக்கம்:** நாட்டார் பாடல் - மருத்துவச்சி வாழ்த்து

**பாடவேளை** : 02

**கற்றற் பேறுகள்:**

- நாட்டார் பாடலை ஓசைநயத்துடன் பாடுவார்.
- நாட்டார் பாடல்கள் இடம்பெறும் சமூக சந்தர்ப்பம் பற்றி விபரிப்பார்.
- பாடல்களின் சிறப்புக்களை எடுத்துரைப்பார்.
- பாடல்களின் மூலம் பெற்றுக்கொள்ளும் அனுபவங்களைப் பகிர்ந்து கொள்வார்.
- விழுமியங்களைக் கடைப்பிடிக்க வேண்டுமென்ற மனப்பாங்கை வளர்த்துக் கொள்வார்.
- உலகு தழுவிய நோக்கினை இனங்கண்டு, பின்பற்றுவார்.

**பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான ஆலோசனைகள்:**

- மாணவர் ஏற்கனவே அறிந்து கொண்ட நாட்டார் பாடல்கள் பற்றிக் கலந்துரையாடுதல்.
- நாட்டார் பாடல் ஒன்றைப் பாடிக் காட்டுதல் அல்லது மாணவர் ஒருவரைப் பாடச் செய்தல்.
- வினாக்களை வினாவிக் கலந்துரையாடுதல்.

  **உ - ம்:**

  - நாட்டார் பாடல் என்றால் என்ன?
  - நாட்டார் பாடல்கள் எச்சந்தர்ப்பங்களில் பாடப்படுகின்றன?
- நாட்டார் பாடல் பயில்வின் பயன்கள் பற்றி விபரித்தல்.
  - அனுபவங்கள்
  - படிப்பினைகள்
  - இரசனை
  - தனியாள், சமூக விமர்சன நோக்கு
- மாணவர்களைக் குழுநிலையில் பாடச் செய்தல்.
- பாடலில் இடம்பெற்றுள்ள விடயங்களை விபரிக்கச் செய்தல்.

**முதன்மைப் பதங்கள் (Key words) / எண்ணக்கருக்கள்:**

- **நாட்டார் பாடல் பற்றிய விளக்கம்:** கிராமிய மக்கள் செவிவழியாகக் கேட்டு, வாய்மொழியாக வழங்கிவரும் பாடல்கள் நாட்டார் பாடல்கள் எனப்படும்.
- நாட்டார் பாடல்களை நாட்டுப்புறப் பாடல்கள், நாட்டுப் பாடல்கள், வாய்மொழிப் பாடல்கள், கிராமியப் பாடல்கள் எனப் பலவாறு அழைக்கின்றனர்.

- மனிதனது பிறப்பு முதல் இறப்பு வரையான நிகழ்வுகளை இவை சித்திரிக்கின்றன.
- குழந்தை பிறந்ததும் மருத்துவச்சி வாழ்த்திப் பாடும் பாடலை, மருத்துவச்சி வாழ்த்துப் பாடல் என்பர்.
- குழந்தையை வாழ்த்துவதன் மூலம் சுகப்பிரசவம், மகிழ்ச்சி என்பவை உறவினர்களுக்குத் தெரியப்படுகின்றது.
- மருத்துவச்சி வாழ்த்தும் போது அரிசி, நெல், மிளகு, இஞ்சி, உள்ளி, மஞ்சள், உப்பு, காசு போன்ற வளமானதும் மங்கலமானதுமான பொருட்களைக் கூறி வாழ்த்துதல் மரபு.
- மருத்துவச்சி வாழ்த்துப் பாடலில் குழந்தையை மட்டுமன்றி, உறவினர்களையும் வாழ்த்தும் மரபு உள்ளது. இதனூடாகக் குடும்ப, சமூக உறவுகளைப் பேணும் பண்பு காணப்படுகின்றது.
- பேச்சுவழக்குச் சொற்கள், பிரதேச வழக்குச் சொற்கள் என்பன நாட்டார் பாடலில் காணப்படுகின்றன.
- நாட்டார் பாடல்கள் ஓசை நயம் மிக்கவை; பொருத்தமான இசையில் பாடக்கூடியவை.
- மருத்துவச்சி என்பது மருத்துவிச்சி எனவும் வழங்கப்படுகிறது.

- **அரும்பத விளக்கம்**

| | | |
|---|---|---|
| கோச்சி | - | ஆச்சி, அம்மா ('ஆச்சி' என்னும் சொல் இங்கு தாயைக் குறிக்கின்றது) |
| கொம்மான் | - | அம்மான் ('அம்மான்' என்னும் சொல் இங்கு மாமாவைக் குறிக்கின்றது) |
| குஞ்சியாச்சி | - | சிறிய தாய் |
| குஞ்சியப்பு | - | சிறிய தந்தை |
| பெரியாச்சி | - | பெரிய தாய் |
| பெரியப்பு | - | பெரிய தந்தை |

## தரவிருத்தி உள்ளீடுகள்:

- பாடநூல்
- ஒலிப்பதிவு நாடா
- இறுவட்டு

## கணிப்பீடும் மதிப்பீடும் தொடர்பான ஆலோசனைகள்:

- நாட்டார் பாடலை ஓசைநயத்துடன் பாடிக்காட்டுவார்.
- நாட்டார் பாடல்கள் சமூகத்தில் பயின்றுவரும் சந்தர்ப்பம் பற்றிக் கூறுவார்.
- பாடல்களிற் காணப்படும் சிறப்புக்களைக் கூறுவார்.
- பாடல்களினூடாகப் பெறப்படும் விழுமியக் கருத்துக்களைத் தொகுத்துக் கூறுவார்.

**தேர்ச்சி 2.0** : இலக்கியங்களைக் கற்று மொழியாற்றலை வெளிப்படுத்துவார்.

**தேர்ச்சி மட்டம்** 2.2 : பாடற் பகுதியினூடாகப் பெற்ற மொழியாற்றலைப் பிரயோகிப்பார்.

**விடய உள்ளடக்கம்**: மருத்துவச்சி வாழ்த்து
(ஏற்கனவே கற்பித்த 1.3 தேர்ச்சி மட்டத்திலுள்ள மருத்துவச்சி வாழ்த்துப் பாடம்)

**பாடவேளை** : 02

**கற்றற் பேறுகள்** :

- செய்யுள் பகுதியினைக் கருத்தூன்றி வாசிப்பார்.
- மையக் கருத்து, துணைக் கருத்துக்களை விபரிப்பார்.
- செய்யுள் பகுதியின் பொருளை விளக்கிக் கூறுவார்.
- பாடல்களில் காணப்படும் சிறப்புக்களை விளக்கிக் கூறுவார்.
- விழுமியக் கருத்துக்களை இனங்கண்டு பின்பற்றுவார்.

## பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான ஆலோசனைகள்:

- நாட்டார் பாடல்களைப் பாடியவர்கள் பற்றி விளக்கமளித்தல்.
- நாட்டார் பாடல்களின் சமூக, சந்தர்ப்பம் பற்றி விளக்கமளித்தல்.
- மாணவர்களைக் குழுக்களாகவும் தனியாகவும் பாடலை இசையோடு பாடச் செய்தல்.
- செய்யுளின் மையக் கருத்து, துணைக் கருத்துக்களை இனங்காணச் செய்தல்.
- செய்யுளின் பொருளைத் தெளிவாக எழுதச் செய்தல்.
- செய்யுளின் மூலம் வெளிப்படும் விழுமியப் பண்புகள் பற்றிக் கலந்துரையாடல்.

## முதன்மைப் பதங்கள் (Key words) / எண்ணக்கருக்கள்:

- நாட்டார் பாடல் பற்றிய விளக்கம்.
- மனிதனது பிறப்பு முதல் இறப்பு வரையான நிகழ்வுகளைச் சித்திரித்தல்
- மருத்துவச்சி வாழ்த்து: குழந்தை பிறந்ததும் மருத்துவச்சி வாழ்த்திப் பாடும் பாடல்

- **அரும்பத விளக்கம்**

| | | |
|---|---|---|
| கோச்சி | - | ஆச்சி, அம்மா ('ஆச்சி' என்னும் சொல் இங்கு தாயைக் குறிக்கின்றது) |
| கொம்மான் | - | அம்மான் ('அம்மான்' என்னும் சொல் இங்கு மாமாவைக் குறிக்கின்றது) |
| குஞ்சியாச்சி | - | சிறிய தாய் |
| குஞ்சியப்பு | - | சிறிய தந்தை |
| பெரியாச்சி | - | பெரிய தாய் |
| பெரியப்பு | - | பெரிய தந்தை |

**தரவிருத்தி உள்ளீடுகள்:**

- பாடநூல்
- அகராதி
- எழுதுதாள்

**கணிப்பீடும் மதிப்பீடும் தொடர்பான ஆலோசனைகள்:**

- நாட்டார் பாடலின் பயன்பாட்டை விபரிப்பார்.
- பாடலிற் காணப்படும் சிறப்புக்களை எடுத்துக் கூறுவார்.
- இப் பாடலின் பாத்திரங்களினூடே வெளிப்படும் மன உணர்வுகளை எடுத்துரைப்பார்.
- தாமும் இது போன்ற பாடல்களைத் தொகுப்பார்.

**தேர்ச்சி** **2.0:** இலக்கியங்களைக் கற்று, மொழியாற்றலை வெளிப்படுத்துவார்.

**தேர்ச்சி மட்டம்** **2-1:** படைப்புக்களில் வெளிப்படும் மொழிப் பிரயோகங்களை நன்கு கிரகித்து விடையளிப்பார்.

**விடய உள்ளடக்கம்:** கவிதை: இனிது என......

1. முளி தயிர் பிசைந்த காந்தள்....
2. தங்க வளையல்

**பாடவேளை** **:** 04

**கற்றற் பேறுகள்:**

- பாடல் வரிகளைச் செம்மையாக வாசிப்பார்.
- பாடலை வாசித்து அதன் கருத்துக்களைக் கூறுவார்.
- பாடல் வரிகள் வெளிப்படுத்தும் உணர்வினைக் கூறுவார்.
- பாடலை உணர்ச்சியுடனும் ஓசைநயத்துடனும் பாடிக் காட்டுவார்.

**பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான ஆலோசனைகள்:**

- பாடலாசிரியர் பற்றிய விபரங்களை அறிந்து கூறுதல்.
- பாடலை மாணவர் ஒவ்வொருவரும் வாசிப்பதற்கு வழிப்படுத்தல்.
- மாணவர்களைக் குழுக்களாக்கி தலைப்பு, கதைக்கரு, பாத்திரப்பண்பு, மொழிநடை தொடர்பான விளக்கத்தைக் கூற வழிகாட்டல்.
- மாணவர் தமது விமர்சனத்தை முன்வைக்கச் சந்தர்ப்பம் வழங்குதல்.
- பொருத்தமான கணிப்பீடு, மதிப்பீடுகளை மேற்கொள்ளல்.

**முதன்மைப் பதங்கள் / எண்ணக்கருக்கள்:**

**பாடல் 1. முளி தயிர் பிசைந்த காந்தள்....**

- தலைவியின் விரல்களின் தன்மையும் அதன் செயற்பாடும்
- அவளுடைய ஆடை
- குவளை மலர் போன்ற கண்களில் புகை நிறைந்த தன்மை
- தலைவி சமைத்ததை இனிமையானது எனக் கணவன் கூறல்
- அதனால் தலைவி கொண்ட மகிழ்ச்சி
- செவிலித்தாயின் புகழ்ச்சி

**பாடல் 2. தங்க வளையல்.......**

- கேலி செய்யும் நண்பர்களுக்கு, கந்தையா தனது மனைவி தயாரித்தளித்த உணவு பற்றி கூறுவது
- உடல் முழுவதும் பெருகும் அன்பினால் சமைத்தது.
- உப்பு அதிகமெனினும் சுவையானது.
- பிள்ளையின் கையினால் அளையப்பட்டமையால் சுவை நிறைந்தது.

- கரிந்தது எனினும் சிறப்பான சுவைமிக்கது.
- அவதி வேளையிலும் அன்போடு கொடுத்தது.
- அன்புக் கயிற்றில் கட்டியது, ஒளி மிகுந்தது.

**தரவிருத்தி உள்ளீடுகள்:**

- பாடநூல்
- காகிதாதிகள்

**கணிப்பீடும் மதிப்பீடும் தொடர்பான ஆலோசனைகள்:**

- பாடலை வாசித்து, அதன் மையக்கருத்தை இனங்கண்டு கூறுவார்.
- பாடலில் நயத்தற்குரிய பகுதிகளைச் சுட்டிக் காட்டுவார்.
- பாடலின் நடை, உணர்ச்சி என்பவற்றை விபரிப்பார்.
- பாடல்களின் மொழிப் பிரயோகங்களை நன்கு கிரகித்து விடையளிப்பார்.
- பாடலை விமர்சித்து எழுதுவார்.

## இரண்டாந் தவணை

| இல. | தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | பக். |
|---|---|---|---|---|
| 01. | 1.0 | 1.2 | உரைநடைப் பகுதி - (சிறுகதை) தாய்ப்பசு | 18 |
| 02. | 3.0 | 3.1 | உரைநடைப் பகுதி - ஏற்கனவே, தே.ம.1.2 இல் கற்பித்த விடயங்களை அடிப்படையாகக் கொள்க. | 20 |
| 03. | 4.0 | 4.2 | செய்யுட் பகுதி - கம்பராமாயணம் | 21 |
| 04. | 1.0 | 1.2 | செய்யுட் பகுதி - விவேகசிந்தாமணி | 23 |
| 05. | 3.0 | 3.1 | செய்யுட் பகுதி - ஏற்கனவே, தே.ம.1.2 இல் கற்பித்த விடயங்களை அடிப்படையாகக் கொள்க. | 25 |

**தேர்ச்சி** 1.0 : இலக்கியங்களை நயந்து, கருத்துக்களை வெளிப்படுத்துவார்.

**தேர்ச்சி மட்டம்** 1.2 : படைப்புக்களை நயந்து, அதன் நோக்கங்கள் பற்றிக் கலந்துரையாடுவார்.

**விடய உள்ளடக்கம்:** சிறுகதை: தாய்ப்பசு

**பாடவேளை:** 03

## கற்றற் பேறுகள்:

- சிறுகதையினை நயந்து வாசிப்பார்.
- 'தாய்ப்பசு' என்ற சிறுகதையின் கருவைப் பற்றிக் கலந்துரையாடுவார்.
- கதைக்கருவுக்கும் கதையோட்டத்திற்கும் பாத்திரங்களுக்கும் இடையிலான இயைபு பற்றி விபரிப்பார்.
- கதையில் இடம்பெறும் பாத்திரங்களின் குணவியல்புகளைப் பற்றி எழுதுவார்.
- சிறுகதையின் ஆசிரியர், அதன் அமைப்பு, மொழிநடை பற்றி எடுத்துரைப்பார்.
- சிறுகதை பற்றிக் கலந்துரையாடி விமர்சனம் எழுதுவார்.
- இது போன்ற கதைகளை வாசித்து, நயந்து அவற்றின் நோக்கங்களை விபரிப்பார்.

## பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான ஆலோசனைகள்:

- சிறுகதை ஆசிரியர் பற்றியும், சிறுகதையின் அமைப்புப் பற்றியும் கலந்துரையாடுதல்.
- மாணவர் ஒவ்வொருவரையும் 'தாய்ப்பசு' என்ற சிறுகதையை, கருத்தூன்றி வாசிக்கச் செய்தல்.
- மாணவர்களைக் குழுக்களாக்கித் தலைப்பின் பொருத்தப்பாடு, கதைக்கரு, கதாபாத்திரங்களின் பண்புகள், மொழிநடை முதலியன பற்றிக் கலந்துரையாடச் செய்தல்.
- அகிலன் பற்றிய விபரங்களைத் தேடியறிய வழிப்படுத்தல்.
- கதையின் நோக்கங்கள் பற்றி எடுத்துக் கூறுதல்.
- மாணவர்களுடன் சிறுகதையில் நயந்த பகுதிகளைக் கலந்துரையாடி, அவற்றை விபரிக்க வழிப்படுத்தல்.
- பொருத்தமான கணிப்பீட்டினை மேற்கொண்டு மதிப்பிடல்.

## முதன்மைப் பதங்கள் (Key words) / எண்ணக்கருக்கள்:

- 'தாய்ப்பசு' என்ற சிறுகதையின் ஆசிரியர் பற்றிய விபரங்கள்
- அகிலன், அவரது பிற படைப்புக்கள் பற்றிய விளக்கம்
- அவர் பெற்ற விருதுகள் பற்றிய விளக்கம்

- சிறுகதையின் அமைப்புப் பற்றிய விளக்கம்
    - அளவிற் சிறியது
    - குறைந்தளவிலான கதாபாத்திரங்கள்
    - கதைக்கரு, பொருத்தமான கதைக்களம்
    - வாசகரைக் கவரும் மொழி நடை
    - யதார்த்தப் பண்புகள்
    - படிப்பினை
    - எடுத்துரைக்கும் பாங்கு
- **தாய்ப்பசு சிறுகதையின் கதாபாத்திரங்கள்**
    - மாடசாமி (பால்காரன்)
    - பிறிதொரு பால்காரன்
    - தாய்ப்பசு
    - காளை மாடு
    - கன்று
    - குமரன்
- பசுவிடம் காணப்படும் தாய்மை உணர்வு, அதன் செய்கை என்பவற்றை ஆசிரியர் எடுத்துக் கூறும் விதம்
- சிறுகதையின் மொழிநடை, எடுத்துரைக்கும் பாங்கு
- சிறுகதையின் மூலம் கூறவரும் கருத்துக்களையும் படிப்பினைகளையும் ஆசிரியர் எடுத்துக் கூறும் விதம்
- சிறுகதை மூலம் கூறப்படும் விழுமியச் சிந்தனையை எடுத்துக் கூறும் விதம்
- **அரும்பதங்களின் பொருள் விளக்கம்**

| | | |
|---|---|---|
| கிடாரிக் கன்று | - | ஆண் கன்று (நாம்பன் கன்று) |
| சீம்பால் | - | பசு, ஆடு முதவானவை கன்று ஈன்றவுடன் சுரக்கும் மஞ்சள் நிறமான பால் |
| செவலைக் காளை | - | சிவந்த நிறமுடைய (நாம்பன்) மாடு |
| மஞ்சுவிரட்டு | - | ஜல்லிக்கட்டு (காளை அடக்கல்) |

## தரவிருத்தி உள்ளீடுகள்:

- பாடநூல்
- சிறுகதை ஆசிரியர் பற்றிய குறிப்புக்கள்
- எழுதுதாள், எழுது கருவி

## கணிப்பீடும் மதிப்பீடும் தொடர்பான ஆலோசனைகள்:

- சிறுகதையொன்றினைக் கருத்தூன்றி நயந்து வாசிப்பார்.
- கதைக்கரு, தலைப்பின் பொருத்தப்பாடு, கதைக்களம் பற்றி எடுத்துரைப்பார்.
- கதாபாத்திரங்களின் இயல்புகளை விபரிப்பார்.
- கதையின் நோக்கம், படிப்பினைகள் பற்றிக் கலந்துரையாடி, கருத்துக்களை முன்வைப்பார்.
- கதையினை வாசிப்பதன் மூலம் பெறப்படும் படிப்பினைகளை நடைமுறை வாழ்க்கையில் பின்பற்றுவார்.
- ஜீவ காருண்ய சிந்தனைகளைத் தூண்டும் ஆக்கங்களைப் படைப்பார்.

**தேர்ச்சி 3.0** : பல்வேறுபட்ட படைப்புக்களை வாசிப்பதன் மூலமாக இலக்கியத்தரம் வாய்ந்த ஆக்கங்களைப் படைப்பார்.

**தேர்ச்சி மட்டம் 3.1** : பல்வேறு வகைப்பட்ட படைப்புக்களை ஆர்வத்துடன் வாசிப்பார்.

**விடய உள்ளடக்கம்** : சிறுகதை: தாய்ப் பசு
(ஏற்கனவே, தேர்ச்சி மட்டம் 1.2 இல் கற்பித்த பாடம்)

**பாடவேளை**: 03

**கற்றற் பேறுகள்:**

- சிறுகதையை இரசனை உணர்வோடு வாசிப்பார்.
- 'தாய்ப்பசு' சிறுகதையை வாசிப்பதன் மூலம், வாழ்வியல் அம்சங்களைப் பற்றிய கருத்துக்களைத் தெரிவிப்பார்.
- பல்வேறுபட்ட படைப்புக்களைத் தேடி, ஆர்வத்துடன் வாசிப்பார்.
- தாம் விரும்பிய தலைப்பில் ஆக்கங்களை எழுதுவார்.

**பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான ஆலோசனைகள்:**

- ஏற்கனவே வாசித்த, 'தாய்ப்பசு' என்ற சிறுகதை பற்றிக் கலந்துரையாடுதல்.
- சிறுகதையின் அமைப்புப் பற்றி விபரித்தல்.
- மாணவர்கள் வாசித்த பல்வேறு கதைகள் பற்றிக் கூறச் செய்தல்.
- மாணவர்களைக் குழுக்களாக்கி, 'தாய்ப்பசு' என்ற சிறுகதையில் தாம் நயந்த பகுதிகளைக் கலந்துரையாடச் செய்தல்.
- குறிப்பிட்ட தலைப்பில் ஆக்கங்களை எழுதப் பயிற்றுவித்தல்.
- பொருத்தமான கணிப்பீட்டினை மேற்கொண்டு மதிப்பிடல்.

**முதன்மைப் பதங்கள் (Key words) / எண்ணக்கருக்கள்:**

- ஏற்கனவே, தேர்ச்சி மட்டம் 1.2 இல் கற்பித்த தாய்ப்பசு என்ற சிறுகதையின் முதன்மைப்பத விளக்கத்தினைப் பயன்படுத்தவும்.

**தரவிருத்தி உள்ளீடுகள்:**

- பாடநூல் (தாய்ப்பசு - சிறுகதை)
- எழுது கருவி

**கணிப்பீடும் மதிப்பீடும் தொடர்பான ஆலோசனைகள்:**

- சிறுகதைகளை ஆர்வத்துடன் வாசிப்பார்.
- கதைகளில் தாம் இரசித்தவற்றைச் சுவைபடக் கூறுவார்.
- பல்வேறுபட்ட படைப்புக்களைத் தேடி வாசிப்பார்.
- வாழ்வியல் அம்சங்களைத் தமது ஆக்கங்களில் வெளிப்படுத்துவார்.

**தேர்ச்சி 4.0 :** இலக்கியங்களை நயந்து, கருத்துக்களை வெளிப்படுத்துவார்.

**தேர்ச்சி மட்டம் 4.2 :** படைப்புக்களை நயந்து, அதன் நோக்கங்கள் பற்றிக் கலந்துரையாடுவார்.

**விடய உள்ளடக்கம்:** கம்பராமாயணம் - கிட்கிந்தைப் படலம்

**பாடவேளை:** 12

**கற்றற் பேறுகள்:**

- கம்பராமாயணம் பற்றி அறிந்து கூறுவார்.
- பாடல்களைச் சந்தி பிரித்து, கொண்டு கூட்டிப் பொருள் விளங்கக் கூறுவார்.
- அரும்பதங்களின் பொருளை அறிந்து விளக்குவார்.
- அணிச் சிறப்புக்களை இனங்கண்டு விபரிப்பார்.
- பாடல்களை நயந்து, கருத்துக்களை முன்வைப்பார்.
- பாத்திரங்களின் குணவியல்புகளை விபரிப்பார்.
- கிட்கிந்தைப் படலத்தின் கதைப்போக்கைச் சுருக்கமாக எழுதுவார்.

**பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான ஆலோசனைகள்:**

- கம்பராமாயணக் கதைச்சுருக்கத்தைக் கூறுதல்.
- பாடல்களைச் சந்திபிரித்து, கொண்டு கூட்டிப் பொருள் கூறச்செய்தல்.
- பாடல்களில் இடம்பெறும் அருஞ்சொற்களுக்கு விளக்கமளித்தல்.
- அணிகளின் சிறப்புக்களைப் பற்றிக் கலந்துரையாடல்.
- பாத்திரங்களின் குணவியல்புகள் பற்றிய விளக்கம்.
- பொருத்தமான கணிப்பீடு, மதிப்பீடுகளை மேற்கொள்ளல்

**முதன்மைப் பதங்கள் (Key words) / எண்ணக்கருக்கள்:**

- கம்பராமாயணத்தைப் பற்றியதும் கம்பரைப் பற்றியதுமான விளக்கம் அல்லது அறிமுகம்
- கிட்கிந்தைப் படலம் பற்றிய விபரம்.
- சுக்கிரீவன் வாக்குத் தவறியமை பற்றி இராமன் சினத்தல்.
- இலக்குவனை கிட்கிந்தைக்கு அனுப்புதல்.
- அனுமன் கூறிய உபாயம்.
- தாரை இலக்குவனை வழிமறித்தல்.
- தாரையின் வருகை பற்றிய வர்ணணை.
- தாரையைப் பார்த்து இலக்குவன் அமைதியடைதல்.
- இலக்குவன் தாரையைப் பார்த்ததும் தன் தாயாரை நினைத்து வருந்துதல்.
- பாடல்களில் நயந்த கருத்துக்களை முன்வைக்கச் செய்தல்.
- கதைச்சுருக்கத்தை எழுத வழிகாட்டல்.

**அரும்பதங்கள்**

| | | | |
|---|---|---|---|
| 1. | மொய்ம்பினோய் | - | வலிமையுடையவனே |
| 2. | சீர்மை | - | சிறப்பு |
| 3. | ஆண்தகை ஆளி | - | ஆண்களுள் சிங்கம் |
| 4. | நூபுரங்கள் | - | சிலம்புகள் |
| 5. | அணங்கு | - | தெய்வப் பெண் |
| 6. | மேகலை | - | மகளிர் இடையில் அணியும் ஏழு கோவை உள்ள அணிவகை |

## தரவிருத்தி உள்ளீடுகள்:

- பாடநூல்
- கம்பராமாயணக் காட்சிக்கேற்ற படங்கள், இறுவட்டுகள்
- அகராதி
- எழுதுதாள், எழுதுகருவிகள்

## கணிப்பீடும் மதிப்பீடும் தொடர்பான ஆலோசனைகள்:

- கம்பராமாயணம் பற்றிச் சுருக்கமாகக் கூறுவார்.
- பாடல்களின் பொருளைத் தமது மொழிநடையில் எழுதுவார்.
- கதாபாத்திரங்களின் குணவியல்புகள் பற்றிக் கலந்துரையாடுவார்.
- அணிகளை இனங்கண்டு எழுதுவார்.
- கிட்கிந்தைப் படலத்தின் கதைச்சுருக்கத்தைக் கூறுவார்.
- நயந்த பகுதிகளைப் பற்றி விபரிப்பார்.
- கிட்கிந்தைப் படலத்தை, நாடக வடிவத்தில் ஆக்குவார்.
- குழுநிலையில் நாடகமாக நடித்துக் காட்டுவார்.

**தேர்ச்சி** 1.0 : இலக்கியங்களை வாசித்து நயந்து, கருத்துக்களை வெளிப்படுத்துவார்.

**தேர்ச்சி மட்டம்** 1.2 : படைப்புகளை நயந்து, அதன் நோக்கங்கள் பற்றிக் கலந்துரையாடுவார்.

**விடய உள்ளடக்கம்** : விவேகசிந்தாமணி

**பாடவேளை** : 05

**கற்றற் பேறுகள்:**

- நூல் பற்றிய அடிப்படை விபரங்களை அறிந்து துலங்குவார்.
- செய்யுள்களைச் சந்திபிரித்து, கொண்டு கூட்டி, செம்மையாக வாசித்துக் காட்டுவார்.
- அரும்பதங்களுக்குப் பொருள் கூறுவார்.
- செய்யுள்களிற் காணப்படும் அணிகளை இனங்கண்டு எழுதுவார்.
- செய்யுளிற் காணப்படும் கற்பனைத் திறன், வருணனைச் சிறப்பு முதலானவற்றை நயந்து எழுதுவார்.

**பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான ஆலோசனைகள்:**

- நூல் பற்றி மாணவருக்கு விளக்கமாகக் கூறுதல்.
- பாடற் பகுதியைச் சந்தி பிரித்து, கொண்டுகூட்டி வாசிக்க வழிகாட்டுதல்.
- மாணவர்களைக் குழுக்களாக்கி, கலந்துரையாடி பாடலின் பொருள், நயம் அறிய வழிகாட்டுதல்.
- மாணவர் குழுக்கள் தாம் நயந்தவற்றை முன்வைக்க வழிகாட்டுதல்.
- பாடலின் நயம் தொடர்பாகக் கலந்துரையாடி விளக்கமளித்தல்.
- பொருத்தமான கணிப்பீடு, மதிப்பீட்டினை மேற்கொள்ளல்.

**முதன்மைப் பதங்கள் (Key words) / எண்ணக்கருக்கள்:**

- நூல் பற்றிய அறிமுகம்
  - நூல் பற்றிய விபரங்களைத் தேடித் தொகுத்து வழங்குக.

(அ) **தேன் நுகர் வண்டு…………**

- மது மயக்கத்தில் கிடந்த வண்டுகளைத் தலைவி கரத்திலே எடுத்து, அது நாவற் பழமோ எனப் பார்த்தபோது, வண்டானது தலைவியின் முகத்தினை சந்திரன் தோன்றியதெனவும், மலர் ஆகிய அவள் கரம் குவியும் எனவும் அஞ்சிப் பறந்து போனது. தலைவி, “பழம் ஒன்று பறந்து விட்டது. இது என்ன புதுமையோ?” என்றாள்.

(ஆ) **தண்டு உலாவிய……….**

- தலைவி தாமரைக் குளத்தில் நீரைக் கையிலேந்தி, முகத்தருகே கொண்டு சென்ற போது, அதில் கெண்டை மீன் தோற்றவே கூவிக் கொண்டு கரையேறினாள். ஆனால் கெண்டை மீனைக் காணவில்லை.

(இ) **அலகு வாள் விழி..........**

- வாள் போன்ற விழியையுடையவளும் ஆராய்ந்தெடுக்கப்பட்ட அணிகலன்களை அணிந்தவளுமாகிய அவளின் சிறந்த நெற்றியிலே உள்ள திலகத்தைக் கண்டு, அவளின் எதிரே வந்த செவ்விய வில்லையுடைய மன்மதனும் அத்திலகத்தைக் கலக்கம் செய்வதாகிய (சிவனின் நெற்றிக்) கண்ணோ என நினைத்து, தன்னிடமிருந்த மலர்க்கணைகள் ஐந்தையும் கீழே வைத்துவிட்டுப் பணிந்தான்.

- **அணிச் சிறப்பு**
  - உவமை, உருவகம் முதலான அணிகளை இனங்காணுதல்

    உ-ம்:

    **மலர்க்கரம்** - உவமை அணி - மலர் போன்ற கரம்

- **அரும்பத விளக்கம்**

| | | |
|---|---|---|
| தியங்கி | - | மயங்கி |
| தடங்கை | - | தடம் + கை - நீண்ட கை |
| புகன்றாள் | - | சொன்னாள் |
| கெண்டை | - | கெண்டை மீன் |
| மொண்டு | - | அள்ளி |
| நன்னுதல் | - | நன்மை + நுதல் - நல்ல நெற்றி, அழகான நெற்றி |
| மாறன் | - | மன்மதன் |

## தரவிருத்தி உள்ளீடுகள்:

- பாடநூல்
- எழுதுகருவிகள்
- எழுதுதாள்

## கணிப்பீடும் மதிப்பீடும் தொடர்பான ஆலோசனைகள்:

- நூல் பற்றிய விபரங்களை அறிந்து கூறுவார்.
- பாடல்களைச் சந்தி பிரித்தும், கொண்டு கூட்டியும் வாசிப்பார்.
- பாடலின் பொருளைத் தமது மொழிநடையில் எழுதுவார்.
- பாடல்களை நயந்து விபரிப்பார்.
- பாடலின் சிறப்புக்கள், அணிகள் என்பவற்றை இனங்கண்டு எழுதுவார்.
- தாமும் இவை போன்ற ஆக்கங்களைப் படைப்பார்.

**தேர்ச்சி** 3.0 : பல்வேறுபட்ட படைப்புக்களை வாசிப்பதன் மூலமாக இலக்கியத்தரம் வாய்ந்த ஆக்கங்களைப் படைப்பார்.

**தேர்ச்சி மட்டம்** 3.1 : பல்வேறுபட்ட படைப்புக்களை ஆர்வத்துடன் வாசிப்பார்.

**விடய உள்ளடக்கம்**: விவேக சிந்தாமணி
(ஏற்கனவே, தேர்ச்சி மட்டம் 1.2 இல் கற்பித்த செய்யுட் பகுதி)

**பாடவேளை**: 03

**கற்றற் பேறுகள்:**

- பாடல் ஆசிரியர் பற்றி அறிந்து கூறுவார்.
- பாடல்களை இரசனையுடன் வாசிப்பார்.
- பாடல்களின் பொருளைக் கூறுவார்.
- பாடலை ஓசையுடன் பாடுவார்.
- இவை போன்ற பிற படைப்புக்களைத் தேடி ஆர்வத்துடன் வாசிப்பார்.

**பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான ஆலோசனைகள்:**

- பாடலாசிரியர் பற்றிய குறிப்புக்களைக் கூறிப்பிட்டுக் கலந்துரையாடுதல்.
- பாடலை இசையுடன் பாடிக்காட்டுதல் அல்லது ஒலிநாடாவில் பதிவு செய்து செவிமடுக்கச் செய்தல்.
- மாணவர்களைக் குழுக்களாக்கிப் பாடலை வாசிக்கச் செய்தல்.
- அருஞ் சொற்களின் பொருளை விளக்குதல்
- தனித்தனியாகப் பாடலை நயந்து வாசிக்கச் செய்தல்.
- பாடலை ஓசை நயத்துடன் பாடச் செய்தல்.
- பொருத்தமான கணிப்பீடு, மதிப்பீடு மேற்கொள்ளல்.

**முதன்மைப் பதங்கள் (Key words) / எண்ணக்கருக்கள்:**

- ஏற்கனவே, கற்பித்த தேர்ச்சி மட்டம் 1.2 இலுள்ள விவேக சிந்தாமணி பாடத்தின் முதன்மைப் பத விளக்கத்தினைப் பயன்படுத்தவும்.

**தரவிருத்தி உள்ளீடுகள்:**

- பாடநூல்
- எழுது தாள்
- அகராதி
- ஒலிநாடா / இறுவட்டு

**கணிப்பீடும் மதிப்பீடும் தொடர்பான ஆலோசனைகள்:**

- பாடலின் பொருளை விளங்கிக் கூறுவார்.
- மையக் கருத்தை இனங்கண்டு எழுதுவார்.
- பாடலை ஓசை நயத்துடன் பாடுவார்.
- பாடலை இரசித்து, புதிய ஆக்கங்களைப் படைப்பார்.
- இது போன்ற பிற படைப்புக்களைத் தேடி, ஆர்வத்துடன் வாசிப்பார்.

## மூன்றாந் தவணை

| இல. | தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | | | பக். |
|---|---|---|---|---|---|---|
| 01 | 1.0 | 1.1 | உரைநடைப் பகுதி | - | உரிமையும் கடமையும் | 27 |
| 02. | 3.0 | 3.2 | உரைநடைப் பகுதி | - | ஏற்கனவே, தே.ம.1.1இல் கற்பித்த விடயங்களை அடிப்படையாகக் கொள்க. | 29 |
| 03. | 1.0 | 1.4 | உரைநடைப் பகுதி (சிறுகதை) | - | எலியம் | 30 |
| 04. | 4.0 | 4.1 | செய்யுட் பகுதி | - | திருக்குறள் | 32 |
| 05. | 1.0 | 1.3 | செய்யுட் பகுதி (கவிதை) | - | புதுமைப் பெண்ணாய் மாறிடுவோம் | 34 |
| 06. | 3.0 | 3.2 | செய்யுட் பகுதி | - | ஏற்கனவே, தே.ம.1.3இல் கற்பித்த விடயங்களை அடிப்படையாகக் கொள்க. | 36 |

**தேர்ச்சி** 1.0 : இலக்கியங்களை நயந்து, கருத்துக்களை வெளிப்படுத்துவார்.

**தேர்ச்சி மட்டம்** 1.1 : பாடப் பகுதிகளை ஈடுபாட்டுடனும் குரல் ஏற்ற இறக்கத்துடனும் வாசிப்பார்.

**விடய உள்ளடக்கம்** : **உரைநடைப் பகுதி** : உரிமையும் கடமையும்

**பாடவேளை** : 04

**கற்றற் பேறுகள்:**

- கட்டுரைப் பகுதியைக் கருத்தூன்றி வாசிப்பார்.
- கட்டுரையின் மையக் கருத்தினை இனங்கண்டு எழுதுவார்.
- துணைக் கருத்துக்களை விபரிப்பார்.
- தர்க்க ரீதியாகக் கருத்துக்களை முன்வைப்பார்.
- கட்டுரையை வாசிப்பதனூடாகப் பெறும் விழுமியங்களைத் தமது வாழ்வில் கடைப்பிடிப்பார்.

**பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான ஆலோசனைகள்:**

- அனைத்து மாணவர்களையும் 'உரிமையும் கடமையும்' என்ற கட்டுரையைக் கருத்தூன்றி வாசிக்கச் செய்தல்.
- வாசித்த உரைப்பகுதி பற்றிக் கலந்துரையாடல்.
    - மையக்கருத்து
    - துணைக் கருத்துக்கள்
    - சொல்லாட்சி
- உரைப்பகுதியொன்றினை மாணவர்களுக்குத் தனித்தனியாக வழங்கி, வாசிக்கச் செய்தல்.
- மாணவர்களில் ஒருவரை எழுமாறாக அழைத்து மையக்கருத்து, துணைக் கருத்துக்களைக் கூறச் செய்தல்.
- அனைத்து மாணவர்களையும் கலந்துரையாடலில் ஈடுபடுத்தல்.
- மௌனமாக வாசித்து வினாக்களுக்கு விடை எழுதச் செய்தல்.
- பொருத்தமான கணிப்பீட்டினை மேற்கொண்டு மதிப்பிடல்.

**முதன்மைப் பதங்கள் / எண்ணக்கருக்கள்:**

- உரிமை, கடமை பற்றிய விளக்கம்
- உரிமைகள், கடமைகள் பற்றி அனைவரும் அறிந்திருத்தல் அவசியம்
- உரிமையில்லாத வாழ்வு உயிரற்ற வாழ்வு

- உரிமை பெற்று வாழ, கடமை அவசியம்.
- குடும்பத்தில் அனைவருக்கும் கடமைகள் உண்டு.

- உரிமையை மிகுதியாக விரும்பி, கடமையைப் புறக்கணிக்கக் கூடாது. இதனால் உரிமை நிலைக்காது; குடும்பத்தில் போராட்டம் ஏற்படும்.
- எல்லோரிடமும் ஒத்த அன்பு செலுத்தி, தன்நலத்தைக் குறைத்தல் வேண்டும்.
- அன்பு செலுத்துவதன் மூலம் ஏற்றத்தாழ்வைப் போக்கலாம்.
- உத்திகள்
    - திருக்குறள் முதலானவற்றிலிருந்து மேற்கோள் காட்டுதல்

**தரவிருத்தி உள்ளீடுகள்:**

- பாடநூல்
- திருக்குறள்

**கணிப்பீடும் மதிப்பீடும் தொடர்பான ஆலோசனைகள்:**

- மையக் கருத்தினை இனங்கண்டு எழுதுவார்.
- தர்க்க ரீதியாகச் சிந்திக்கும் ஆற்றலை வெளிப்படுத்துவார்.
- வாசித்துக் கிரகித்து வினாக்களுக்கு விடை எழுதுவார்.
- பாடப் பகுதியில் குறிப்பிடப்படும் விழுமியங்களைத் தமது வாழ்வில் கடைப்பிடிப்பார்.

**தேர்ச்சி 3.0** : பல்வேறுபட்ட படைப்புக்களை வாசிப்பதன் மூலமாக இலக்கியத்தரம் வாய்ந்த ஆக்கங்களைப் படைப்பார்.

**தேர்ச்சி மட்டம் 3.2** : படைப்புக்களைச் சிந்தித்துக் கலந்துரையாடி தமது ஆர்வத்திற்கும் ஆற்றலுக்கும் கற்பனைத் திறனுக்கும் ஏற்புடைய வேறுபட்ட ஆக்கங்களைப் படைப்பார்.

**விடய உள்ளடக்கம்**: உரிமையும் கடமையும்
(ஏற்கனவே, தேர்ச்சி மட்டம் 1.1 இல் கற்பித்த விடயம்)

**பாடவேளை** : 02

**கற்றற் பேறுகள்:**

- 'உரிமையும் கடமையும்' என்ற கட்டுரைப் பகுதியினைக் கருத்தூன்றி வாசித்து, தலைப்புக்குரிய விடயங்களைப் பட்டியற்படுத்துவார்.
- பட்டியற்படுத்திய விடயங்களைத் தொகுத்து நோக்குவார்.
- தொகுத்த விடயங்களிலிருந்து கருத்துக்களைக் கூறுவார்.
- எடுத்துக் கொண்ட பகுதித் தலைப்புக்களுக்கேற்ப விடயங்களை விளக்கி, ஆக்கங்களை எழுதுவார்.

**பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான ஆலோசனைகள்:**

- 'உரிமையும் கடமையும்' என்ற கட்டுரையின் தலைப்புப் பற்றி, மாணவர்களுடன் கலந்துரையாடுதல்.
- கலந்துரையாடிய விடயங்களை மாணவர்கள் வாயிலாக விளக்கச் செய்தல்.
- கட்டுரையின் உள்ளடக்க விடயங்களைத் தழுவிச் சில தலைப்புக்களை முன்வைத்து அவை தொடர்பாகக் கட்டுரைகளை ஆக்கச் செய்தல்.
- மாணவர் எழுதிய கட்டுரைகளைப் பார்வையிட்டு, பொருத்தமான ஆலோசனைகள் வழங்குதல்.
- பொருத்தமான கணிப்பீடு, மதிப்பீடுகளை மேற்கொள்ளல்.

**முதன்மைப் பதங்கள் (Key words) / எண்ணக்கருக்கள்:**

- ஏற்கனவே, தேர்ச்சி மட்டம் 1.1 இல் கற்ற 'உரிமையும் கடமையும்' என்ற கட்டுரையின் முதன்மைப் பத விளக்கத்தினைப் பயன்படுத்தவும்.

**தரவிருத்தி உள்ளீடுகள்:**

- பாட நூல்
- எழுதுதாள்

**கணிப்பீடும் மதிப்பீடும் தொடர்பான ஆலோசனைகள்:**

- கட்டுரையாக்க நுட்பங்களை வெளிப்படுத்துவார்.
- விடயங்களைத் தொகுத்து, அவை பற்றிக் கலந்துரையாடுவார்.
- தலைப்புக்களுக்கேற்ப விடயங்களை விளக்கி, பல்வேறு வடிவ ஆக்கங்களை எழுதுவார்.

**தேர்ச்சி** 1.0 : இலக்கியங்களை நயந்து, கருத்துக்களை வெளிப்படுத்துவார்.

**தேர்ச்சி மட்டம்** 1.4 : விமர்சன நோக்குடன் படைப்புப் பற்றிய கருத்துக்களை முன்வைப்பார்.

**விடய உள்ளடக்கம் :** சிறுகதை: எலியம்

**பாடவேளை** : 03

**கற்றற் பேறுகள்:**

- சிறுகதையினை நயந்து வாசிப்பார்
- 'எலியம்' சிறுகதையின் கருவை இனங்கண்டு கூறுவார்.
- கதைக்கும், கதைத் தலைப்பிற்கும் இடையிலான பொருத்தப்பாட்டை விமர்சிப்பார்.
- கதாபாத்திரங்களின் குணவியல்புகளை விமர்சிப்பார்.
- கதையின் களம், மொழிநடை, உத்தி பற்றி எடுத்துரைப்பார்.
- சிறுகதையாசிரியர் பற்றி அறிந்து கூறுவார்.
- சிறுகதையின் அமைப்புப் பற்றி விமர்சிப்பார்.
- சிறுகதை கூறும் வாழ்வியலை விமர்சித்து எழுதுவார்.
- இதன் மூலம் வேறு சிறுகதைகளை விமர்சிக்கும் ஆற்றலை வெளிப்படுத்துவார்.

**பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான ஆலோசனைகள்:**

- சிறுகதை பற்றியும், ஆசிரியர் பற்றியும் விபரித்தல்.
- ஒவ்வொரு மாணவரையும் 'எலியம்' என்ற சிறுகதையை மௌனமாக வாசித்துக் கிரகிக்க வழிப்படுத்தல்.
- கதைக் களம், தலைப்பு, கதைக்கரு என்பன பற்றி கலந்துரையாடச் செய்தல்.
- கதையின் மொழிநடை, கதாபாத்திரங்களின் இயல்புகள் பற்றி விபரித்தல்.
- சிறுகதையொன்றினை விமர்சிப்பது தொடர்பாகக் கலந்துரையாடி வழிப்படுத்தல்.
- 'எலியம்' சிறுகதை கூறமுனையும் கருத்துக்கள், நோக்கங்கள், கையாளப்பட்ட உத்திகள் என்பனவற்றை எழுதச் செய்தல்.
- பொருத்தமான கணிப்பீட்டினை மேற்கொண்டு மதிப்பிடல்.

**முதன்மைப் பதங்கள் (Key words) / எண்ணக்கருக்கள்:**

- **சிறுகதை ஆசிரியர் பற்றிய விபரம்**
  - பெயர் - உமா வரதராஜன்
  - கிழக்கிலங்கையின் கரையோரக் கிராமமாகிய பாண்டிருப்பில் பிறந்தார்.
  - தாத்தா உடையப்பா, தந்தை மாணிக்கம் ஆகியோரின் பெயர்களின் முதலெழுத்துக்களை இணைத்து உமா வரதராஜன் என வைத்துக்கொண்டார்.
  - வட மாகாண சபை விருது பெற்ற உள்மன யாத்திரை (1989) எனும் கதைத் தொகுப்பிலிருந்து 'எலியம்' கதை எடுக்கப்பட்டுள்ளது.
  - சமூக யதார்த்தத்தை வெளிப்படுத்துவனவாக இவரது கதைகள் அமைந்துள்ளன.
  - தன் அனுபவங்களையும உணர்வுகளையும் கதையாக்கியுள்ளார்.

- **சிறுகதையின் அமைப்புப் பற்றிய விளக்கம்**
  - 'எலியம்' கதை, வாழ்க்கை அனுபவங்களை வெளிப்படுத்துகின்றது.
  - எலிகளால் அனுபவிக்கும் துன்பம்
  - எலிகளை ஒழிப்பதற்காக எடுத்த முயற்சிகள்
  - பூனையால் ஏற்படும் இடர்கள்
  - எலிகளை ஒழிப்பதில் தோற்றுப்போதல்
  - எலிகளிடமிருந்து தன்னை எவ்விதம் காப்பது என்ற பயம் மேலோங்கிக் காணப்படல்
  - கதை கூற முனையும் கருத்துக்கள்

- **தனி மனிதனின் இயல்புகள், சமூகம் பற்றிய பார்வை**
  - அலுவலகம்
  - அயல்வீடு
- கையாளப்பட்ட உத்திகள்
- மொழிநடை

## தரவிருத்தி உள்ளீடுகள்:
- பாடல்கள் - சிறுகதை
- எழுது தாள்கள்
- எழுது கருவிகள்

## கணிப்பீடும் மதிப்பீடும் தொடர்பான ஆலோசனைகள்:
- சிறுகதையை இரசனையுடன் வாசிப்பார்.
- கதைக்களம், கதைக்கரு, தலைப்பின் பொருத்தப்பாடு என்பன பற்றி எடுத்துரைப்பார்.
- கதாபாத்திரங்களின் குணாதிசயங்களை விமர்சிப்பார்.
- கதையினூடாக ஆசிரியர் வெளிப்படுத்தும் வாழ்வியலை விமர்சித்து எழுதுவார்.
- கதையை எடுத்துரைப்பதற்குக் கையாளப்பட்ட மொழிநடை, உத்திகள் பற்றி விபரிப்பார்.
- சிறுகதையொன்றினை விமர்சிக்கும் ஆற்றலைப் பெற்று விமர்சனம் எழுதுவார்.

**தேர்ச்சி 4.0 :** இலக்கியங்களை வாசித்து நயந்து கருத்துக்களை வெளிப்படுத்துவார்.

**தேர்ச்சி மட்டம் 4.1 :** படைப்புக்களை நயந்து, அதன் நோக்கங்கள் பற்றிக் கலந்துரையாடுவார்.

**விடய உள்ளடக்கம்:** திருக்குறள் - நலம்புனைந்து உரைத்தல்

**பாடவேளை :** 05

## கற்றற் பேறுகள்:

- குறட் பாக்களைச் சந்தி பிரித்து, கொண்டுகூட்டி வாசிப்பார்.
- அவற்றின் பொருள்களை விளக்கிக் கூறுவார்.
- திருக்குறளின் அணிச் சிறப்பை இனங்கண்டு எழுதுவார்.
- தாம் நயந்தவற்றைப் படைப்புக்களில் பிரயோகிப்பார்.

## பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான ஆலோசனைகள்:

- குறட் பாக்களைச் சந்தி பிரித்தும் கொண்டுகூட்டியும் வாசிக்க வழிப்படுத்தல்.
- வாசிக்கும்போது பொருள் விளக்கம் கூறுவதற்கும் அணிகளை இனங்காண்பதற்கும் வழிகாட்டுதல்.
- மாணவர்களைக் குழுக்களாக்கி, படைப்பின் நோக்கத்தையும் படைப்பாக்க நுட்பங்களையும் கூறுவதற்குக் குழுவேலைகளை வழங்குதல்.
- மாணவர், குழுவேலைகளை முன்வைக்கவும் கருத்துக்களை வெளிப்படுத்தவும் வழிகாட்டுதல்.
- மாணவர் முன்வைத்தவற்றின் குறை, நிறைகள் பற்றிக் கலந்துரையாடலும் தேவையான விளக்கமளித்தலும்.
- பொருத்தமான கணிப்பீடு, மதிப்பீடுகளை மேற்கொள்ளல்.

## முதன்மைப் பதங்கள் (Key words) / எண்ணக்கருக்கள்:

- திருக்குறள் - காமத்துப்பால் - நலம் புனைந்து உரைத்தல்

- அணிநயங்கள் :

  குறள் - 1 காதலி (தலைவி)யை அனிச்சப்பூவுடன் ஒப்பிட்டு, அவள் அனிச்சத்தை விட மென்மையானவள் என்று கூறுதல்

  குறள் - 2 மலர்கள் தன் காதலியின் கண்ணை ஒத்திருத்தல் கண்டு, தலைவன் மலர்களைக் காணும்போதெல்லாம் மயங்கி நிற்றல்

  குறள் - 3 தலைவியின் தோள் மூங்கிலுக்கு உவமிக்கப்படல். அவளுடைய மேனி, கண், முறுவல், வாசனை என்பவற்றின் அழகு சிறப்பிக்கப்படல்

  குறள் - 4 குவளை மலரை விட, தலைவியின் கண்கள் அழகுமிக்கவை என்பது கூறப்படும் வகை

| | |
|---|---|
| குறள் - 5 | தலைவியின் இடையின் மென்மை, உயர்வு நவிற்சியாகக் கூறப்பட்டுள்ளமை |
| குறள் - 6 | விண் மீன்கள் சுற்றுதல், திரிதல் என்பவற்றுக்குக் காரணம் கூறப்படும் வகை |
| குறள் - 7 | சந்திரனுக்கும் தலைவியின் முகத்துக்கும் வேறுபாடு கண்டுணர முடியாமல் நட்சத்திரங்கள் கலங்கின. |
| குறள் - 8 | சந்திரனிடத்து உள்ள கறை போன்று, இவளிடம் கறை எதுவுமில்லை; ஆதலால், இவள் முகம் சந்திரனை விடச் சிறந்தது எனக் கூறும் வகை |
| குறள் - 9 | சந்திரன் தலைவியின் முக அழகுக்கு நிகராகமாட்டாது என்பது கூறப்படும் வகை |
| குறள் - 10 | மிக மென்மையான அனிச்ச மலரும் அன்னப் பறவையின் இறகும் கூட தலைவியின் பாதங்களை நெருஞ்சிமுள் போல வருத்தவல்லன என தலைவியின் மென்மை உயர்வு நவிற்சியாகப் பாராட்டப்படுகிறது. |

## தரவிருத்தி உள்ளீடுகள்:

- பாடநூல்
- ஒலிப்பதிவு நாடா

## கணிப்பீடும் மதிப்பீடும் தொடர்பான ஆலோசனைகள்:

- குறட் பாக்களைச் சந்தி பிரித்து கொண்டுகூட்டி வாசிப்பார்.
- குறட் பாக்களின் பொருளை எழுதுவார்.
- அரும்பதங்களுக்குப் பொருள் கூறுவார்.
- திருக்குறளில் உள்ள அணிநயங்கள், சிறப்புக்கள் என்பவற்றை இனங்கண்டு எழுதுவார்.
- திருக்குறளில் உள்ள நயங்கள், சிறப்புக்கள் என்பனவற்றின் நோக்கம் பற்றிக் கலந்துரையாடி, தொகுத்து எழுதுவார்.
- தாம் நயந்தவற்றை வேறு ஆக்கங்களில் பிரயோகிப்பார்.

**தேர்ச்சி 1.0** : இலக்கியங்களை நயந்து கருத்துக்களை வெளிப்படுத்துவார்.

**தேர்ச்சி மட்டம்** 1.3 : படைப்புக்கள் மூலமாக சமூகத்தையும் தான் வாழும் உலகத்தையும் விளக்கி, அவை பற்றிய கருத்துக்களை முன்வைப்பார்.

**விடய உள்ளடக்கம்:** கவிதை: புதுமைப் பெண்ணாய் மாறிடுவோம்

**பாடவேளை** : 03

**கற்றற் பேறுகள்:**

- கவிதை வரிகளைச் சந்தி பிரித்து வாசிப்பார்.
- கவிதையில் இடம்பெறும் அரும்பதங்களுக்குப் பொருள் கூறுவார்.
- கவிதையின் மையக்கருத்தைக் கூறுவார்.
- கவிதையை நயந்து வாசிப்பார்.
- தேயிலைத் தோட்ட மக்களின் வாழ்வியல் அம்சங்களை எடுத்துரைப்பார்.
- உவமை முதலான அணிகளை இனங்கண்டு விபரிப்பார்.
- ஆசிரியர் கையாண்ட உத்திகளை, எடுத்துரைப்பு முறையினை விபரிப்பார்.
- கவிதையினூடாக வெளிப்படும் சமூக ஊடாட்டத்தை விளக்கி, கருத்துக்களை முன்வைப்பார்.

**பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான ஆலோசனைகள்:**

- குறிஞ்சித் தென்னவன் பற்றிய குறிப்புக்களைக் கூறிக் கலந்துரையாடுதல்.
- 'புதுமைப் பெண்ணாய் மாறிடுவோம்' என்ற கவிதையைத் தனித்தனியாக வாசிக்கச் செய்தல்.
- கவிதையைச் சந்தி பிரித்து, பொருள் விளங்க வாசிக்கச் செய்தல்.
- கவிதையை நயந்து வாசிக்கச் செய்தல்.
- கவிதையூடாக தோட்ட (தொழிலாளி)ப் பெண்களின் நிலை பற்றியும் விடிவு பற்றியும் கவிஞர் எவற்றைக் கூற முற்படுகிறார் என்பது பற்றியும் கலந்துரையாடுதல்.
- மாணவர்களைக் குழுக்களாக்கி, கவிதையின் உள்ளடக்கம், தலைப்பின் பொருத்தப்பாடு, மொழிநடை, எடுத்துரைப்பு முறை தொடர்பாகக் கலந்துரையாடி விளக்கத்தைக் கூற வழிப்படுத்தல்.
- உவமை முதலான அணிகளை இனங்காணச் செய்தல்.
- மாணவர்களை, இக்கவிதை பற்றிய தமது கருத்துக்களை, முன்வைக்கச் செய்தல்.
- பொருத்தமான கணிப்பீட்டை மேற்கொண்டு மதிப்பிடுதல்.

**முதன்மைப் பதங்கள் (Key words) / எண்ணக்கருக்கள்:**

- கவிஞர் பற்றிய குறிப்புரைகள்:
  குறிஞ்சித் தென்னவன் - மலையகக் கவிஞர்
- குறிஞ்சித் தென்னவன் பற்றிய விபரத்தை வழங்குக.
- தேயிலைத் தோட்டதில் வேலை பார்க்கும் மலையகம் வாழ் பெண்கள் பற்றியது
  - காலையிலே சங்கு ஊதுமுன் கொழுந்து பறிக்கக் கிளம்புதல்
  - மிக்க குளிரில் கொழுந்து பறித்தல்
  - நெஞ்சத்திலேற்படும் துன்ப, துயர நிலை
  - விடிவு பற்றிய கருத்துக்கள்
  - சுதந்திர உணர்வு

- வர்ணனைச் சிறப்புகள்
    - பனி காயுமுன் காற்றைக் கிழித்துச் செல்லல்
    - வெண்டக்காய் போன்று விரல்கள் வளைத்தல்
      “ தளிர் கிள்ள கைகள் .......”

- சூரியோதயக் காட்சி
    - மலை நாட்டில் சூரியன் உதயமாதல்
    - தன் பொற் கதிர்களால் அனைவரையும் கழுவுதல்
    - வண்ணச் செம்பொன் துகள்களை எல்லாவிடத்திலும் தூவியது போன்றிருத்தல்
    - அடிமைத்தனத்தினை எடுத்தெறியத் துணிதல்

- உவமை முதலான அணிகள்
- பெண்கள் பெற்ற விழிப்புணர்வினைப் போன்று கவிதை அமைந்திருத்தல்

- **அரும்பத விளக்கம்**

| | | |
|---|---|---|
| பனி காய்தல் | - | பனி விலகுதல் |
| தளிரைக் கிள்ளிடுவோம் | - | கொழுந்தினைப் பறித்திடுவோம் |
| மலைமுகடு | - | மலை உச்சி |
| சுகித்துடுவான் | - | இன்பம் அனுபவித்திடுவான் |
| கனல் | - | நெருப்பு |
| சதிராடும் | - | நாட்டியமாடும் |
| நிரை | - | வரிசை |
| அடிமைத் தளை | - | அடிமை விலங்கு |

## தரவிருத்தி உள்ளீடுகள்:

- பாடநூல்
- கவிதை
- எழுது தாள், எழுது கருவி

## கணிப்பீடும் மதிப்பீடும் தொடர்பான ஆலோசனைகள்:

- கவிதையைச் சந்தி பிரித்து, பொருள் விளங்க வாசிப்பார்.
- கவிதையை வாசித்து மையக்கருத்தை இனங்கண்டு கூறுவார்.
- கவிதையில் நயத்தற்குரிய பகுதிகளைச் சுட்டிக்காட்டி விபரிப்பார்.
- உவமை அணிகளை இனங்கண்டு முன்வைப்பார்.
- அனுபவங்களையும் அவதானிப்புக்களையும் வெளிப்படுத்திக் கவிதை எழுதுவார்.

**தேர்ச்சி 3.0 :** பல்வேறுபட்ட படைப்புக்களை வாசிப்பதன் மூலமாக இலக்கியத்தரம் வாய்ந்த ஆக்கங்களைப் படைப்பார்.

**தேர்ச்சி மட்டம் 3.2 :** படைப்புக்கள் குறித்துச் சிந்தித்து, கலந்துரையாடி, தமது ஆர்வத்திற்கும் ஆற்றலுக்கும் கற்பனைத் திறனுக்கும் ஏற்புடைய வேறுபட்ட ஆக்கங்களைப் படைப்பார்.

**விடய உள்ளடக்கம்:** கவிதை: புதுமைப் பெண்ணாய் மாறிடுவோம்
(ஏற்கனவே, தேர்ச்சி மட்டம் 1.3 இல் கற்பித்த விடயம்)

**பாடவேளை:** 03

**கற்றற் பேறுகள்:**

- கவிதையை நயந்து வாசிப்பார்.
- 'புதுமைப் பெண்ணாய் மாறிடுவோம்' என்ற கவிதையினை வாசிப்பதன் மூலம், தாம் வாழும் சமூக ஊடாட்டங்களை விளங்கி, கருத்துக்களைத் தெரிவிப்பார்.
- கவிதைகளைத் தேடி வாசிப்பார்.
- வாழ்வியல் அம்சங்களைப் பிரதிபலிக்கக் கூடிய ஆக்கங்களைப் படைப்பார்.

**பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான ஆலோசனைகள்:**

- ஏற்கனவே கற்ற, 'புதுமைப் பெண்ணாய் மாறிடுவோம்' என்ற கவிதை தொடர்பாகக் கலந்துரையாடுதல்.
- கவிதை கூறும் வாழ்வியல் அம்சங்களை விபரித்தல்.
- சமூக நிதர்சனங்களைப் பிரதிபலிக்கக்கூடிய கவிதைகள் பற்றிக் கலந்துரையாடச் செய்தல்.
- தலைப்புக்களைக் கொடுத்து, பொருத்தமான கவிதை வரிகளைக் கூறச் செய்தல்.
- பொருத்தமான கணிப்பீட்டினை மேற்கொண்டு மதிப்பிடல்.

**முதன்மைப் பதங்கள் (Key words) / எண்ணக்கருக்கள்:**

- ஏற்கனவே, தேர்ச்சி மட்டம் 1.3 இல் கற்பித்த 'புதுமைப் பெண்ணாய் மாறிடுவோம்' என்ற கவிதையின் முதன்மைப் பத விளக்கத்தினைப் பயன்படுத்தவும்.

**தரவிருத்தி உள்ளீடுகள்:**

- பாடநூல்கள்
- புதுமைப் பெண்ணாய் மாறிடுவோம் - கவிதை
- எழுது கருவிகள்

**கணிப்பீடும் மதிப்பீடும் தொடர்பான ஆலோசனைகள்:**

- கவிதையை நயந்து வாசிப்பார்.
- கவிதைகள் கூறும் சமூக நிதர்சனங்களை எடுத்துரைப்பார்.
- தாமும் தரம் வாய்ந்த ஆக்கங்களை எழுதுவார்.
- கற்பனைத் திறனுக்கு ஏற்புடைய பிற ஆக்கங்களைப் படைப்பார்.